பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 19 | வியாழக்கிழமை 03.01.2019 | கதிர் 59

## இது ரகசியம் அல்ல!

சுமந்திரனுக்குப் போதாத காலம் என்று பார்த்தால் அவரின் உதவியாளர்களுக்கும் கூட இது போதாத காலம் போலும்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி அடி சறுக்கி நிற்பது சுமந்திரனுக்கு இப்போது நெருக்கடி தந்திருக்கும் விவகாரம். இந்த அரசியல் சிக்கலுக்குள் தமது பக்கம் 02

தைப் பொங்கலோடு உங்கள் காலைக்கதிர் Kalaikkathir
புதுப் பொலிவுடன்
(விவரங்கள் விரைவில்)

# ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு இல்லையேல் ஆதரியோம்!

### எமது மக்களின் நிலைப்பாடு அதுவே என சம்பந்தன் நேற்று திட்டவட்டம்

கொழும்பு, ஜனவரி 03

புதிய அரசமைப்பின் ஊடாக முன்வைக்கப்படும் தீர்வானது ஒருமித்த நாட்டுக்குள் பிரிக்கப்பட முடியாததாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் அமையவேண்டும். அதேவேளை, மக்களும் பிராந்திய / மாகாண அரசுகளும் தமது வாழ்வில் தொடர்புடைய அன்றாட விடயங்கள் தொடர்பில் அதிகாரங்களைப் பயன்படுத்தும் வகையிலான நேர்மையான ஓர் அதிகாரப் பகிர்வையும் கொண்டிருக்க வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். பக்கம் 11



## மோ.சைக்கிள் மோதி முதியவர் உயிரிழப்பு

### ஆறுகால்மடத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ்ப்பாணம் – மானிப்பாய் வீதி ஆறுகால் மடத்தடிப் பகுதியில் நேற்று புதன்கிழமை காலை பக்கம் 11

## அரசியல் பழிவாங்கலில் நான் ஈடுபடவேயில்லை!

### அமைச்சரவைக் கூட்டத்தில் மைத்திரி



கொழும்பு, ஜன. 03

அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையில் நான் ஈடுபடவில்லை. இனிமேல் ஈடுபடப்போவதும் இல்லை. பக்கம் 11

## ஆயுதங்களுடன் நடமாடியவர் காட்டுக்குள் தப்பியோட்டம்!

### வவுனியா புதூரில் பதற்றம்



வவுனியா, ஜன. 03

வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலய வீதியில் ஆயுதங்களுடன் சென்ற நபரைப் பொலிஸார் கைது செய்ய முயன்றபோது அவர் ஆயுதங்களைக் பக்கம் 11

## நியாயமான அதிகாரப் பகிர்வுக்கு புலம்பெயர் சமூகம் பச்சைக்கொடி

### சுமந்திரன் எம்.பி. நம்பிக்கை

கொழும்பு, ஜன. 03

தீவிரவாதப் போக்குடைய புலம்பெயர் சமூகத்தினர் மிக சிறிய எண்ணிக்கையிலேயே உள்ளனர். எனவே, இலங்கையில் புதிய அரசமைப்பின் ஊடாக நியாயமான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால் அதற்குப் பெரும்பான்மையான புலம்பெயர் சமூகத்தினர் தமது ஆதரவை பக்கம் 11

## 2019 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் மார்ச் 5 இல் நாடாளுமன்றுக்கு

கொழும்பு, ஜன. 03

2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதி நாடாளுமன்றில் முன்வைக்கிறார் நிதி அமைச்சர் மங்கள சமரவீர.

வரவு – செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணி கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் நிறைவடைந்திருந்தது. பக்கம் 11

## ஒற்றையாட்சித் தீர்வை மஹிந்தவே தந்திருப்பார்

### கூறுகின்றார் தவராசா

யாழ்ப்பாணம், ஜன. 03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு எனவும், சமஷ்டிக் குணாம்சங்களைக்கொண்ட தீர்வு எனவும் கூறிக்கொண்டிருக்கும் நிலையில் பக்கம் 02

## பரபரப்புக்கு மத்தியில் இன்று கூடுகிறது சு.கவின் செயற்குழு

கொழும்பு, ஜன. 03

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று மாலை கூடவுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்கான பக்கம் 11

## சாவிக்கொத்துடன் நேற்று சு.க. தலைமையகம் சென்ற மைத்திரி

கொழும்பு, ஜன. 03

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்துக்கு நேற்றுத் திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

புத்தாண்டுக்கான கட்சிப் பணிகளை ஆரம்பித்து வைப்பதற்கும், கட்சியின் நிர்வாக பக்கம் 11

## புதிய அரசமைப்பை நிறைவேற்ற நாம் ஒருபோதுமே இடமளியோம்

### மஹிந்த அணியினர் விடாப்பிடி



கொழும்பு, ஜன. 03

நாடாளுமன்றத்தில் இந்த ஆண்டு புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்று மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரி பக்கம் 11

## யார் இந்த நாமல் குமார?

### வெளியாகின திடுக்கிடும் தகவல்கள்



கொழும்பு, ஜன. 03

நாமல் குமார என்பவர் போலி ஆவணங்களை சமர்ப்பித்து இலங்கை இராணுவத்தில் இணைந்தவர் என்றும், பயிற்சியின்போது தப்பிச்சென்றவர் என்றும் சி.ஐ.டியினர் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதி பக்கம் 11

## கோட்டாபயவுக்குத் தேர்தலில் போட்டியிடும் எண்ணமில்லை

கொழும்பு, ஜன. 03

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கூறிவருகின்றபோதும், தேர்தலில் போட்டியிடும் எண்ணம் அவரிடம் இல்லை என்று தெரியவருகின்றது.

கோட்டாபய ஜனாதிபதித் தேர் பக்கம் 11

## கம்பெரலிய திட்டத்தை முன்னெடுக்க அனுமதி!

கொழும்பு, ஜன. 03

ஆட்சிமாற்றத்தின் பின்னர் இடைநிறுத்தப்பட்ட கம்பெரலிய (ஊரெழுச்சி) வேலைத்திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அமைச்சரவை பக்கம் 02

# பந்துலவின் கருத்து; மஹேல வருத்தம்

கொழும்பு, ஜன. 03

நாடாளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்தனவின் பரீட்சை முடிவுகள் தொடர்பிலான சர்ச்சைக்குரிய கருத்து வருத்தமளிப்பதாக இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

2018 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் முதலாம் இடத்தைப் பிடித்த மாணவி தொடர்பில் பந்துல குணவர்தன சர்ச்சைக்குரிய கருத்து ஒன்றை வெளியிட்டிருந்தார்.

முதலாம் இடத்தைச் சர்வதேசப் பாடசாலை மாணவி ஒருவரே பெற்றுள்ளார் என்றும், அவர் சூழ்ச்சியின் மூலம் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளார் எனவும் பந்துல கூறியிருந்தார்.

இது குறித்து தனது டுவிட்டரில் கருத்து தெரிவித்த மஹேல, பந்துல குணவர்தனவின் கருத்து தொடர்பில் நான் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலவசமாக அல்லது கட்டணம் செலுத்திக் கல்வி பயின்றாலும், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் எதிர்காலச் சந்ததியினரைத் தைரியப் படுத்தவேண்டும்.

சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள். விசேடமாக அகில இலங்கை ரீதியில் 5 ஆம் இடத்தைப் பெற்ற மாண விக்கு எனது வாழ்த்துக்கள். சிறப்பாகச் செயற்பட்டுள்ளீர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# பொருளாதார நிலையங்களை விற்பனை செய்கிறது ஐ.தே.க.

## கடுமையாகச் சாடுகிறது மஹிந்த அணி

கொழும்பு, ஜன. 03

பொருளாதாரச் சிக்கல்களைச் சமாளிக்க வியாபார மத்தியஸ்தலங் களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி முயற் சித்து வருவதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான அநுர பிரிய தர்ன யாப்பா குற்றம்சாட்டி யுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

2019 ஆம் ஆண்டானது தேர்தலுக்கான ஆண் டாகவே கருதப்படுகிறது. இன்று இந்த நாட்டில் இரண்டு தரப்பினர் காணப்படுகின்றனர். அதாவது மக்களுக்குச் சார்பான தரப்பு மற்றும் மக்களுக்கு எதிரான தரப்பு என இரு வேறு தரப்பினர் உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று பெரும்பான்மை யான அரசொன்று இல்லை. இதனால், அவர்கள் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகள் வெறும் பிரசாரமாகவே, இருப்பதை எம்மால் காணக்கூடிய தாக இருக்கிறது.

இவ்வாண்டில் பொருளாதாரத்தை எடுத்துக் கொண்டால், சர்வதேசக் கடன் தொகையை மீள செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் இலங்கையின் பொருளாதாரம் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததோடு, வரிகளும் அதிகரிக் கப்பட்டன.

இவ்வாறான செயற்பாடுகளினால் சிறிய மற்றும் மத்தியதர வர்த்தகத்தைச் சேர்ந்த வியாபாரிக ளும், மக்களும் தான் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், இவற்றை நிவர்த்தி செய்ய ஐக்கிய தேசியக் கட்சியினர் ஏதேனும், நடவடிக்கைகளை இந்த வருடத்தில் எடுப்பார்கள் என்று நாம் எதிர்ப் பார்க்கவில்லை.

கிராமங்களை அபிவிருத்தி செய்வோம் என அவர்கள் கூறினாலும், அதற்கான நிதி கிடைக்குமா என்பது கூடச் சந்தேகம் தான்.

இந்தச் சிக்கலில் இருந்து மீள, துறைமுகங்கள் உள்ளிட்ட பொருளாதார மத்திய நிலையங்களை வெளிநாடுகளுக்கு விற்கவே ஐக்கிய தேசியக் கட்சி தற்போது முயற்சித்து வருகிறது. எனவே, இந்த வரு டம் நாட்டுக்கு சவாலான ஒரு வருடமாகவே அமை யப்போகிறது – என்றார். (ஐ)

# நாலக டி சில்வாவின் விளக்கமறியல் நீடிப்பு

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக் கப்பட்டுள்ளது. அதன்படி, அவர் தொடர்ந்து எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்றுக் கொழும்பு, கோட்டை நீதி வான் நீதிமன் றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன் னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகி யோரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நாலக டி சில்வா கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# வடமாகாண இடரில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்களுக்கு ஜனாதிபதி நன்றி

கொழும்பு, ஜன. 03

வடமாகாண அனர்த்த நிலை மைகளில் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் அர்ப் பணிப்புடன் செயற்பட்டவர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தால் நேற்று வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கையிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சீரற்ற காலநிலையின் காரண மாக பல இன்னல்களுக்கு முகங் கொடுத்த வடக்கு மாகாண மக் களுக்கு துரித நிவாரணங்களை வழங்கியதுடன், அவர்களின் நலன் புரி தேவைகளுக்காக தொடர்ச்சி யாக பலர் அர்ப்பணிப்புடன் செயற் பட்டனர்.

முப்படையினர், பொலிஸார், மாகாண ஆளுநர்கள், அரச அதி காரிகள், தன்னார்வ நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினர் களுக்கும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நன்றி தெரிவித்துள் ளார்.

அனர்த்தத்திற்கு முகங்கொடுத்த வடபுல மக்களுக்கு ஜனாதிபதி யின் வழிகாட்டலின் கீழ் இந்த விசேட நிவாரண வேலைத்திட் டம் செயற்படுத்தப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணியில் முப் படையினர் துரிதமாக செயற்பட்ட துடன், அவர்களின் அர்ப்பணிப் பின் காரணமாக உயிர் மற்றும் உடைமைகளின் சேதங்களை குறைக்கக்கூடியதாக இருந்தது.

பாதுகாப்புத் துறையினர் மற் றும் ஏனைய அரச அதிகாரிகள் இரவு பகலாக சேவையாற்றி அனர்த்தத்திற்கு முகங்கொடுத்த மக்களுக்கு தேவையான நிவார ணப் பணிகளை தொடர்ச்சியாக வழங்கி வந்தனர்.

தனது நாட்டின் சகோதர மக் கள் அனர்த்தத்திற்குள்ளான சந் தர்ப்பத்தில் தமது கடமைகளை சரி வர நிறைவேற்றி, மனிதாபிமான சேவைக்காக அர்ப்பணிப்புடன் செ லாற்றிய அனைவரின் சேவையை யும் ஜனாதிபதி பாராட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரனுக்குப் போதாத காலம் என்று பார்த்தால் அவரின் உதவியாளர்களுக்கும் கூட இது போதாத காலம் போலும்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி அடி சறுக்கி நிற்பது சுமந்தி ரனுக்கு இப்போது நெருக்கடி தந்திருக்கும் விவகாரம். இந்த அரசியல் சிக்கலுக்குள் தமது அரசியல் எதிர்காலத்தை அவர் எப்படி சீராக்கப் போகின்றார் என் பதுதான் கேள்வி.

கலைக்கப்பட்ட வடக்கு மாகாண சபையில் சுமந்திரனின் உதவி யாளர்கள் நால்வர்.

ஒருவர் சட்டத்தரணி சயந்தன். கட்சிக்குள் மெல்ல மெல்ல செல் வாக்கை உறுதிப்படுத்தி வருபவர். ஏற்கனவே பத்திரிகை அதிபர் எம்.பி.யுடன் முண்டி, முரண்பட்டு நிற்பவர். அதனால் அவரின் சாவகச்சேரி அரசியல் தளத்தில் மற்றொரு களமுனை – மோதல் முனை – திறக்கப்பட்டிருக்கின்றது.

போதாததற்கு, கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தமிழ்க் கூட்டமைப்பு உருவாக்கம் புலிகளுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் செய்யப் பட்ட 'டீல்' என்று பேசி மற்றொரு சர்ச்சையைக் கிளப்பியிருக்கின் றார்.

சர்ச்சைகளைக் கிளப்பி, அதில் மேலேறி வருவதுதானே அரசிய லில் குறுகிய காலத்தில் உயர்வதற்கு வழி....? கனகச்சிதமாகக் காய் நகர்த்துகிறார் போலும் சயந்தன்.

*"தமிழ்க் கூட்டமைப்பு உரு வாக்கம் புலிகளுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான டீல் என்று பதினாறு, பதினேழு வரு டங்களுக்கு முந்திய விவகாரத்தை தேவையின்றி இப்போது கிளப்பி, 'உங்கள் ஆள்' சர்ச்சையை ஏற் படுத்தியிருக்கின்றாரே. இது இப் போது தேவைதானா? இப்படி வாயைக் கொடுத்துப் பிரச்சினை யைக் கிளப்ப வேண்டாம் என்று நீங்கள் அவருக்கு 'அட்வைஸ்' சொல்வதில்லையா?"* – என்று ஒரு கேள்வியை சுமந்திரனிடம் தூக்கிப் போட்டேன். ஒரு வரியில் பதில் கேள்வி எழுப்பி அவர் சொன்ன விடை என்னை அசர வைத்தது.

*"உண்மை பேசுபவர்களை உண்மையைப் பேச வேண்டாம் என்று நான் மறிக்க மாட்டேன். அப்படி உண்மையைப் பேச வேண்டாம் என்று நான் மறிக்க லாமா நீங்களே சொல்லுங்கள்?"* – என்றார் சுமந்திரன். நான் மலைத்துப் போனேன்.

'டீல்' விவகாரம் பற்றிய பேச் சுக்கான ஆயத்த 'டீல்' எங்கு என் பது அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

சுமந்திரனின் அடுத்த அரசி யல் உதவியாளர் யாழ். மாநகர மேயர் ஆர்னோல்ட். அந்தப் பத விக்கு அவரை நெட்டித் தள்ளிக் கொண்டு வந்தவரே சுமந்திரன் தான் என்பது பரகசியம்.

யாழ். மேயர் பதவி எடுத்தவுடன் இங்கு வேலையை பார்க்காமல் அடிக்கடி நீண்ட லீவில் வெளிநாடு சுற்றுகின்றார் என்ற குற்றச்சாட்டு அவரது கட்சிக்குள்ளிருந்தே புகையத் தொடக்கியிருக்கின்றது.

மூன்று நீண்ட விடுமுறைச் சுற்றுலாக்களை இந்தக் காலத் துக்குள் அவர் முடித்துவிட்டார். என்றாலும் ஆள் அரசியல் தந்திர சாலி. தனது யாழ். மாநகர சபை யில் தனித்து அறுதிப் பெரும் பான்மை இல்லாத போதும், கெம் பிக்கொண்டு நின்ற எதிரணியைச் சமாளித்து தனது வரவு – செலவுத் திட்டத்தை விக்கினமின்றி நிறை வேற்ற வைத்துவிட்டார்.

அடுத்த உதவியாளர்களுள் ஒருவர் வடமராட்சி சுகிர்தன். சுமந் திரனும் வடமராட்சியைத்தான் அரசியல் தளமாக வைத்துச் செயற்படுகின்றார். அந்த ஏணி யில் சர்ச்சையில் சிக்காமல் தாம் அரசியலில் நாசூக்காக ஏறும் வேலையை சுகிர்தன் கையாளு கின்றார்.

கடந்த மாகாண சபையில் சுமந்திரனின் நான்காவது அல் லைக்கை அஸ்மின். சுமந்திரனின் தயவில்தான் கூட்டமைப்பின் நிய மனப் பட்டியல் மூலம் முஸ்லி மான அவருக்கு மாகாண சபை உறுப்பினர் பதவி கிட்டியது.

அந்தப் பதவியில் இருந்த காலம் முழுவதும் சுமந்திரனுக்கு விசுவாசமாக இருந்தவர். சுமந்தி ரன் எள் என்றால் எண்ணெய்– யாக நின்றவர். அவரின் விசுவா சம் தொடர்பில் சுமந்திரனுக்கு எள் ளளவும் சந்தேகம் இருந்திருக்காது என்று நம்புகின்றேன்.

சுமந்திரனின் தயவில் கனடா விசிட் அடித்தவர். கனேடியன் தமிழ்க் காங்கிரஸின் உதவியோடு இரண்டு வருடங்களுக்கு 'மல்டி விஸா' பெற்றவர். அதையே இப் போது வசமாக பயன்படுத்தியிருக் கின்றார் என்று கேள்வி.

அஸ்மினின் துணைவியா ருக்குக் கனடாவில் சொந்தக்காரர் கள் உள்ளனர். அவர்கள் மூலம் மனைவிக்கும் பிள்ளைகளுக் கும் விஸா பெற்றுக் கொண்ட அஸ்மின், தமக்கு ஏற்கனவே கூட்டமைப்பு ஒழுங்குபடுத்தல் மூலம் கிடைத்த இரண்டு வருட 'மல்டி விஸா'வைப் பயன்படுத்தி குடும்பத்தோடு கனடாவில் கால் பதித்துவிட்டார்.

*"அனந்தி சசிதரன் தனது சுய பாதுகாப்புக்கு 'பிஸ்டல்' பெறவிண் ணப்பித்தார்"* – என்று பகிரங்க மாகச் சாடிதான் கிளப்பிய சர்ச்சை உட்பட, பல விடயங்களைக் காட்டி கனடாவில் அரசியல் தஞ்சத் துக்கு அஸ்மின் குடும்பத்துடன் கால்கோள் இட்டுவிட்டார் என்று கேள்வி.

இனி என்ன? கனடாவில் கூட் டமைப்பின் நக்கீரன் அண்ட் கோவுக்கு புதியதோர் 'மெம்பர்' சேர்ந்துவிட்டார்.

கனடாவிலிருந்தபடி கூட்ட மைப்பையும், தமிழரசுக் கட்சியை யும் இயக்கும் குழுவின் பிடி இதனால் இன்னும் கொஞ்சம் இறுகினாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை. **- மின்னல் -**

# வெள்ளம் புகுந்த கிணறுகள் துப்பரவுப் பணிகள் ஆரம்பம்



கிளிநொச்சி, ஜன. 03

கனடா உறங்கா விழிகள் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதியில் வெள்ள இடரால் மாசடைந்த கிணறுகள் துப்பரவு செய்து மக்களுக்கு கையளிக்கும் பணி நடை பெற்று வருகின்றது. இந்தப் பணியில் கிளிநொச்சி மாற்றுவலுவுள் ளோர் சங்கமும் கிறீன் பியூச்சர் நேசன் பவுண்டேசனுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது.

அவ்வகையில் கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கட்டைக்காடு பெரியகுளம் பகுதிகளில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிப்படைந்த கிணறுகள் நேற்று புதன்கிழமை துப்பரவு செய்யப்பட்டு குளோறின் இட்டப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இப் பணிகளில் கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சங்க தலைவர் உமாக்காந்தன் மற்றும் கிறீன் பியூச்சர் நேசன் பவுண்டேசன் அமைப்பாளர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இணைந்து ஈடுபட்டிருந்தனர். இந்தப் பணிகளை மேற்கொள்ளுவதற்கான நிதியுதவி கனடாவிலுள்ள உறங்கா விழிகள் தொண்டு நிறுவனத்தினால் கிறீன் பியூச்சர் நேசன் பவுண்டேசனன் ஊடாக வழங்கப்படுகிறுந்தது குறிப் பிடத்தக்கது.

# இராணுவம் வெளியேறவேண்டும் அதில் மாற்றுக் கருத்து கிடையாது

## சாள்ஸ் நிர்மலநாதன் திட்டவட்டம்



முல்லைத்தீவு, ஜன. 03

வடக்கு- கிழக்கில் மக்கள் காணிகள், விவசாய நிலங்களில் நிலைகொண்டுள்ள அனைத்து இராணுவத்தினரும் வெளியேற வேண்டும். இதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வடக்கு- கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டிய அவசியமில்லை என சாள்ஸ் எம்.பி. குறிப்பிட்டார் என்று அண்மையில் சகோதர மொழி ஊடக மொன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

இது குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இராணுவப்பிடியிலுள்ள காணிகள் விடுவிக்கப்படுவதில் சிறியளவு முன்னேற்றம் காணப்படுகின்ற போதிலும், மக்கள் எதிர்பார்த்த அளவில் இராணுவம் மக்களின் காணிகளில் இருந்து செல்லவில்லை.

ஏற்கனவே, 1980ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் இருந்த இராணுவ முகாம்கள் தவிர அதற்குப் பின்னர் போர் காரணமாக உருவாக்கப்பட்ட இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு, மக்களின் ஜனநாயக வாழ்க்கைக்கு இடையூற்ற வகையில் இராணுவம் வெளியேறவேண்டும்.

இது தொடர்பாக ஜனாதிபதியிடமும் அரசிடமும் கோரியுள்ளேன்–என்றார். (ஐ)

## மலையகத்தின் பிரச்சினைக்கு பேதமின்றி ஒன்றிணைவோம்

அருட்தந்தை சக்திவேல் கோரிக்கை




கொழும்பு, ஜன. 03

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா என்ற அடிப்படைச் சம்பளத்தை உறுதி செய்வதற்கு, அனைத்துத் தொழிலாளர் வர்க்கத்தினரும் பேதம் பாராது ஒன்றிணைய வேண்டுமென மலையக சமூக ஆய்வு மையத்தின் இணைப்பாளரான, அருட்தந்தை சக்திவேல் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

மலையகப் பெருந்தோட்ட மக்கள் கடந்த 200 வருட காலமாக இருண்ட யுகத்திற்குள் தள்ளப்பட்டு உள்ளனர். இந்த மக்களை பொருளாதாரத்திலும் தொடர்ச்சியாக கீழ் மட்டத்தில் வைத்திருக்க வேண்டுமென்பதே நாட்டை ஆட்சி செய்பவர்களினதும் கம்பனிகளினதும் நோக்கமாகக் காணப்படுகின்றது.

அந்தவகையில் இந்த மக்களுக்கு வழங்கப்படும் ஊதியம் தற்போதைய வாழ்க்கைச் செலவுக்குப் போதுமானதில்லை என்பது அந்தக் கம்பனிகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நன்கு தெரியும்.

ஆகையால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் ஊதியப் பிரச்சினைக்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து குரல்கொடுக்க வேண்டும். அப்போதுதான் இப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுகொள்ள முடியும்–என்றார். (ஐ)

## தமிழ்க் கனேடியர்களுக்கு இலங்கையில் ஆபத்து!

### அந்நாட்டு அரசு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 03

இலங்கைக்குச்செல்லும் தமிழ்க் கனேடியர்கள் கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்படக் கூடிய ஆபத்து உள்ளது என்று, தமது பிரஜைகளுக்குக் கனேடிய அரசு போக்குவரத்து அறிவுறுத்தல்களை விடுத்துள்ளது.

அந்த அறிவுறுத்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கனேடியர்கள் எந்த நேரத்திலும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். யாழ்ப்பாணம் உட்பட்ட வடக்கு, கிழக்கில் தொடர்ந்தும் படையினரின் பிரசன்னம் உள்ளது. இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அங்கு செல்லும் தமிழ் வம்சாவளியினர் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படலாம்.

அத்துடன்மீள்குடியேற்றம்தொடர்பான பிரச்சினை இன்னும் தொடர்கிறது. குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. காணி விடுவிப்பு தொடர்பான பிரச்சினையும் தொடர்கிறது. மதங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் இனங்களுக்கு இடையில் முறுகல்களை ஏற்படுத்தலாம்.

இந்தநிலையில் மேற்கத்தேய சுற்றுலாப் பயணிகளைத் தொந்தரவுக்கு உள்ளாக்கும் செயற்பாடுகள் அண்மையில் இடம்பெற்றுள்ளன– என்றுள்ளது. (ஐ)

## டெங்கினால் ஒருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் தாக்கத்திற்குள்ளாகிய ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பளைப் பிரதேச செயலக வீதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான வீரசிங்கம் ரவீந்திரன் (வயது – 55) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனியார் பாதுகாப்பு நிறுவனத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராகப் பணியாற்றிய அவர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு, கடந்த மூன்று நாள்களாகக் கடும் காய்ச்சலால் அவதிப்பட்டுள்ளார்.

ஆரம்ப கட்டத்தில் அவர் வைத்தியரை நாடவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கடந்த வாரம் மயங்கிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். டெங்கு நோயின் தாக்கமே உயிரிழப்புக்குக் காரணம் என உடற்கூற்று பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (ஐ)

## உயிலங்குளம் 50 வீட்டுத் திட்டத்தில் 8 பேருக்கு நேற்று காணி உறுதிகள்



முல்லைத்தீவு, ஜன. 03

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் 50 வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த 8 மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்கள் நேற்று துணுக்காய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

உயிலங்குளம் 50 வீட்டுத்திட்டம் 2012 ஆம் ஆண்டு இந்திய அரசின் நிதியுதவியில் இலங்கைச் செஞ்சிலுவை நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு காணிகள் வழங்கப்பட்டு பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுவலுவுள்ளோர் அடங்கலாக 50 குடும்பங்கள் அங்கு குடியேற்றப்பட்டன.

இருப்பினும் அவர்களது காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் இன்றுவரை வழங்கப்படவில்லை. இங்கு நிரந்தரமாக வசித்துவரும் 8 குடும்பங்களுக்கு நேற்று காணி உறுதிப்பத்திரங்களை துணுக்காய் பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி வழங்கினார்.

அங்கு வசித்துவரும் ஏனையவர்களுக்கான காணி உறுதிப் பத்திரங்களும் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதேச செயலாளர் கூறினார். (ஐ)

## மேலும் 8 இலட்சம் குடும்பங்களுக்கு சமூர்த்திக் கொடுப்பனவு கிடைக்கும்

கொழும்பு, ஜன. 02

சமூர்த்தி கொடுப்பனவுக்காகக் காத்திருப்போர் பட்டியலிலுள்ள சுமார் 8 இலட்சம் குடும்பங்களுக்கு இந்த வருடத்துக்குள் அவை வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் தயாகமகே தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் 1.4 மில்லியன் மக்கள் சமூர்த்திக் கொடுப்பனவுகளைப் பெறுதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புத்தாண்டு நிகழ்வில் கலந்துக் கொண்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## முல்லைத்தீவு இ.போ.சவினர் மாணவர்களுக்கு உதவியளிப்பு




முல்லைத்தீவு, ஜன. 03

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கைகொடுக்கும் நோக்கிலும் அவர்களின் கற்றலை ஊக்குவிக்கும் வகையிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலை பணியாளர்கள் அனைவரும் இணைந்து 52 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்க முன்வந்துள்ளனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரை அடுத்து நிவாரணம் வழங்கும் செயற்பாட்டிலும் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்குக் கைகொடுக்கும் பணியிலும் முகநூல் மூலம் ஒன்றிணைந்த உலகளாவிய நண்பர்களின் முயற்சியால் உதவித் திட்டங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலையினர் தமது உதவியை உலகளாவிய முகநூல் நண்பர்கள் குழுமத்திடம் நேற்றுக் கையளித்தனர்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலை முகாமையாளர் மோதிலால் முகநூல் நண்பர்கள் குழுமத்தினரிடம் உதவித் தொகையை வழங்கினார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# மங்களவுக்கு எதிராக வழக்கு தொடர்வேன்

## எச்சரிக்கிறார் பந்துல



கொழும்பு, ஜன. 03

ஜனநாயக நாடு ஒன்றில் நிதி மற்றும் ஊடகத்துறை என்பன ஒரே அமைச்சரின் கீழ் செயற்படுவது சாத்தியமற்றது. எனவே மங்கள சமவீரவுக்கு எதிராக நான் வழக்கு தொடரவுள்ளேன் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கூட்டு எதிரணியின் சார்பில் நிதி அமைச்சர் மங்கள சமவீரவுக்கு எதிராக நான் வழக்கு தொடரவுள்ளேன். காரணம் ஜனநாயக நாட்டில் நிதி மற்றும் ஊடகத்துறை ஒரு அமைச்சின் கீழ் செயற்பட முடியாது. எனவே ஊடகங்களைக் கறுப்பு ஊடகம் என விமர்சிப்பதையும், அவற்றைக் கட்டுப்படுத்துவதையும் இந்த வருடத்தில் மங்கள சமரவீர கைவிடவேண்டும். அமைச்சரவை மற்றும் அது தொடர்பான வர்த்தமானி வெளியிடும் அதிகாரம் ஜனாதிபதியிடம் காணப்படுகின்றது. எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்–என்றார். (ஐ)

# நோயாளியிடம் சங்கிலி திருடிய பெண் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளியிடம் தங்க நகையைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண், நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெண் ஒருவரிடம் சங்கிலி அறுத்தவர் என்பது விசாரணைகளில் தெரிய வந்தது.

இதையடுத்து, நோயாளியிடம் திருடிய வழக்கில் பிணை வழங்கிய யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், நல்லூர் ஆலயத்தில் பெண்ணிடம் சங்கிலியைக் கொள்ளையடித்த வழக்கில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்குச் செல்வோரின் தங்க நகைகள் களவாடப்படுவது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்திற்குத் தொடர்ச்சியாக பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.

அது தொடர்பில் வைத்தியசாலை வளாகத்தினுள் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராக்களின் (சிசிரிவி) உதவியுடன் நகைகளைத் திருடி வந்த பெண்ணொருவர் அடையாளம் காணப்பட்டார். அவரை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் துணையுடன் வைத்தியசாலை நிர்வாகம் மடக்கிப் பிடித்து காணொளி ஆதரத்துடன் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன்னர் ஒப்படைத்தது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை வைத்தியசாலைக்கு வந்த வயோதிபப் பெண்ணொருவரிடம் இருந்து சங்கிலி ஒன்று களவாடப்பட்டுள்ளது. அது தொடர்பில் அந்த வயோதிபப் பெண் வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிட்டார். அதனையடுத்து கண்காணிப்புப் கமராக்களைப் பரிசோதித்தபோது , வைத்தியசாலையில் முன்னர் நகைகளைத் திருடிய குற்றசாட்டில் தம்மால் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பெண்ணே மீண்டும் திருட்டில் ஈடுபடுவதை நிர்வாகத்தினர் கண்டறிந்தனர். அது தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

அந்தக் காணொளியை ஆராய்ந்த யாழ்ப்பாணம் பொலிஸார் அந்தப் பெண்ணை முல்லைத்தீவில் வைத்து கைது செய்தனர். அத்துடன், மேலும் இரண்டு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர். அந்தப் பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெண்ணொருவரிடம் சங்கிலி அறுத்ததையும் அவர் ஒத்துக்கொண்டார். அந்தச் சங்கிலி நகை வேலை செய்பவரிடம் விற்பனை செய்ததையும் சந்தேகநபர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட நகை வேலை செய்பவரை அழைத்து விசாரணை செய்த பொலிஸார், சந்தேகநபரால் விற்பனை செய்யப்பட்ட சங்கிலி உருக்கப்பட்டுத் தங்கக் கட்டியாக மீட்டனர். அதனால் நகை வேலை செய்பவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளியிடம் தங்க நகையைத் திருடியமை மற்றும் நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெண் ஒருவரிடம் சங்கிலி அறுத்தமை என இரண்டு குற்றச்சாட்டுக்களுக்கு தனித் தனியே வழக்குகளைப் பதிவு செய்தனர்.

சந்தேகநபரான பெண், அவருடன் கைது செய்யப்பட்ட மேலும் மூவர் மற்றும் நகை வேலை செய்பவர் என 5 பேரை யாழ்ப்பாணம் நீதிவான் அன்ரனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முன்தினம் பொலிஸார் முற்படுத்தினர். அத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் நகைப் பறிம்கொடுத்த வயோதிப் பெண்ணும் நீதிமன்றில் முன்னிலையானார்.

வழக்குகளை விசாரணை செய்த நீதிவான், சந்தேகநபருடன் கைது செய்யப்பட்ட மூவரையும் நகைத் தொழிலாளியையும் பிணையில் விடுவித்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் திருடிய நகை சந்தேகநபரிடம் மீட்கப்பட்டதால் அந்த வழக்கில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

எனினும் நல்லூர் ஆலயத்திருவிழாவில் பெண் ஒருவரிடமிருந்து அபகரித்த சங்கிலி உருக்கப்பட்டுள்ளது. அதனால் அந்த வழக்கில் சந்தேகநபரான பெண்ணை வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் அன்ரனி சாமி பீற்றர் போல் உத்தரவிட்டார். (ஐ)

# கங்காராமய விகாரையில் மைத்திரி, மஹிந்த, சஜித்!



கொழும்பு, ஜன. 03

கொழும்பு கங்காராம விகாரையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற ஆசீர்வாதப் பூசையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 31ஆம் திகதி நள்ளிரவு முதல் ஜனவரி 01 ஆம் திகதிவரை கங்காராம விகாரையில் சம்பிரதாயபூர்வமாக இடம்பெறும் சமயக் கிரியைகளுடன் இணைந்ததாக நோய்வாய்ப்பட்டுள்ள வண. தேரர் விரைவில் சுகமடைய வேண்டுமெனப் பிரார்த்தித்து இந்த ஆசீர்வாத பூஜை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ஐ)

## நாளை

04.01.2019
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : கேட்டை பி.ப 2.34 வரை
திதி : சதுர்த்தசி பி.இ 6.07 வரை
சுபநேரம் : 6.31 – 8.01 வரை
இராகுகாலம் : 11.01 – 12.31 வரை

# நாட்டைப் பிளவுபடுத்துமாறு கோரவில்லை கூட்டமைப்பு!

### கூறுகிறார் அர்ஜுன ரணதுங்க

கொழும்பு, ஜன. 03

நாட்டைப் பிளவுபடுத்தும் எந்தக் கோரிக்கையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் அரசிடம் முன் வைக்கவில்லை.

- இவ்வாறு போக்குவரத்து மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்காக, அரசு, நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய எந்த வாக்குறுதியையும் கொடுக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"பிரிவினைவாதம் அல்லது இனப் பிளவுகளைத் தூண்டி விடும் செயல்களில் அரசு ஈடுபட்டால், அரசுடன் இணைந்து செயற்படமாட்டேன்.

தனிநாட்டை உருவாக்கிக் கொடுப்பதாகக் கூட்டமைப்புக்கு அரசு வாக்குறுதி கொடுத்திருப்பதாகப் பரப்பப்படும் வதந்திகளில் உண்மையில்லை.

ஆனால், நாட்டைப் பிளவுபடுத்த, கூட்டமைப்புக்கு அரசு அனுமதி அளித்திருப்பதாகக் குறிப்பிட்ட சிலர் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளைக் கூறி வருகின்றனர்.

வடக்கு மக்களின் பல்வேறு



பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசின் ஆதரவைக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது.

நாட்டைப் பிளவுபடுத்தும் எந்தக் கோரிக்கையையும், கூட்டமைப்பு ஒருபோதும் முன் வைக்கவில்லை" - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# ஊடக சுதந்திர சுட்டியில் இலங்கை முன்னேற்றம்!

கொழும்பு, ஜன. 03

உலக பத்திரிகைச் சுதந்திர நிறுவனம் (வேள்ட் ப்ரெஸ் ப்ரீடம்) வெளியிட்டுள்ள அறிக்கைக்கு அமைய, 2017ஆம் ஆண்டில் 141 ஆவது இடத்தில் இருந்த இலங்கை 2018ஆம் ஆண்டில் 131ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இந்தச் சுட்டியின்படி, உலகில் ஊடக சுதந்திரம் கூடுதலாக உள்ள நாடு நோர்வே ஆகும்.

ஊடகசுதந்திரம் மிகவும் குறைவாக உள்ள நாடு எரித்திரியாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவில் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் மிகவும் கீழ் மட்டத்தில் இருக்கின்றன.

அதேவேளை, மாலைதீவு, ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய நாடுகள் இலங்கையையும் விட மேலிடத்தில் உள்ளன.

இந்த சுட்டியில் 94ஆவது இடத்தில் உள்ள பூட்டான் தெற்காசியாவில் ஊடக சுதந்திரத்தை கூடுதலாகப் பேணும் நாடாக அமைந்துள்ளது. (ஐ)

# வடக்கில் புலிகளுக்கு பயந்து ஒதுங்கியவர்களே பிரச்சினை!

### கூறுகின்றார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஜன. 03

போர்க்காலத்தில் விடுதலைப்புலிகளுக்குப் பயந்து ஒதுங்கியவர்களே வடக்கில் தமிழ் மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையும் விரிசலை ஏற்படுத்த முனைகின்றனர் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ்சேனாநாயக்க தெரிவித்தார்.



சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

வடக்கிலுள்ள தமிழ் மக்கள் இயற்கை இடர்களில் சிக்கும் போது, உடனடியாக அந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளை இராணுவத்தினர் செய்து வருகின்றனர். ஆனால், தங்களது இத்தகைய செயற்பாடுகளின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலர், எங்களது பெயருக்குத் தொடர்ச்சியாகக் களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

இராணுவத்தினரை விமர்சனம் செய்கின்ற இவர்கள், வடக்கு மக்களுக்காக எதனையும் செய்ததில்லை என்பதுடன் எங்களின் பாதுகாப்பிலேயே வாழ்ந்து வருகின்றார்கள்-என்றார். (ஐ)

# வடக்கு அவைத் தலைவரின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்





கிளிநொச்சி, ஜன. 03

வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட அக்கராயன் புதுமுறிப்பு விக்னேஸ்வரா மகாவித்தியாலய மாணவர்களுக்கு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களின் பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள் புதுவருட தினமான நேற்று வழங்கப்பட்டன.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் பங்கேற்றனர். (ஐ)

# உயர்கல்வி மாணவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்

## பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவின் நிகழ்வில் அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 03

உயர்கல்வித் துறையில் மாணவர்களின் மோதல்கள் மற்றும் எதிப்பு பேரணிகள் என்பன இடம்பெறுகின்றன. அவர்களது கோரிக்கைகளை இவ்வாறான வழியில்தான் வெளிப்படுத்துகின்றனர். இருந்தபோதிலும் அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களது கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து அவர்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு நாங்கள் முயற்சிப் போம். அந்த வியத்தில் சம்பந்தப் படுபவர்கள் பொறுமை கடைப்பிடிப்பதும் அவசியமாகும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அத்துடன், இந்த மாணவர்களின் மோதலுக்கு மத்தியில் தங்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு எத்தனிக்கும் சந்தர்ப்பவாத அரசியல் சக்திகள் பற்றியும் நாங்கள் அறியாமலில்லை என்றும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்விற்கு தலைமை வகித்து உரையாற்றிய போதே அமைச்சர் ஹக்கீம் இவற்றை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எமக்குக் கிடைத்துள்ள மிக குறுகிய கால எல்லையில் இந்த நாட்டில் உயர்கல்வித் துறையில் பாரிய சாதனைகளைச் செய்ய முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் இத்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்ய முடியும். இதன் பிரதான இலக்கு மற்றும் பல்வேறுபட்ட காரணங்கள் தொடர்பில் எமது அவதானத்தை இப்போது செலுத்தியுள்ளோம். இந்த நாட்டில் உயர்கல்வியின் தரநிர்ணயத்தைப் பேணுவது தொடர்பில் பிரச்சினை உள்ளது. இங்கு அரச பல்கலைக்கழகங்கள் உட்பட வெளிவாரிப்பட்டப்படிப்பினை வழங்கும் நிறுவனங்கள் பல உள்ளன. ஆனால் இவற்றை விடவும் அதிகமான



தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் இங்கு செயற்படுகின்றன. இவற்றில் சில தனியார் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியை பெற்று செயற்படுகின்றன. ஆனால் அவ்வாறில்லாமல் அநேகமானவை உயர்கல்வியின் தரத்தை உரியமுறையில் பேணாமல் செயற்படுகின்றன.

எனவே இவ்வாறான பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமாயின் இவற்றை ஆராய்வதற்குச் சுயாதீன ஆணைக்குழு ஒன்றை நிறுவி உயர்கல்வியின் தரத்தையும், சிறப்பையும் பாதுகாத்து பேணுகின்ற வகையில் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும். தொடரும் இந்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வாக இது வரைக்கும் பேணிவந்த உயர் கல்வியின் தரத்தினை பாதுகாக்கும் வகையில் சுயாதீன ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கு தேவையான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்பிக்கவுள்ளேன். இது தொடர்பில் மிக ஆழமான ஆய்வை மேற்கொண்டுளேன். அவ்வாறே உயர்கல்வியின் தரத்தினை மேம்படுத்துவது தொடர்பில் முன்னர் இருந்த உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான் லால்கிரேரோவினதும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி.சில்வாவினதும் பங்களிப்பு மகத்தானது. எனவே இந்த நாட்டில் உயர் கல்வியின் தரத்தை இன்னும் உயர்த்துவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அவ்வாறே இந்த 2019 ஆம் ஆண்டை உயர் கல்வியின் தரத்தை பேணி பாதுகாக்கும் ஆண்டாகக் குறிக்க முடியும்.


கடந்த பல வருடங்களில் இந்த நாட்டில் உயர்கல்விக்கு பெருந்தொகை பணம் செலவழிக்கப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவின் பெறுமதியில் 60 பில்லியன் ரூபாக்கள் செலவிடப்பட்டுள்ளது. அதாவது 60,000 இலட்சம் ரூபாக்கள் செலவழிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் இந்த நாட்டின் உயர்கல்வி தொடர்பிலான பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி துறையில் மாணவர்களின் மோதல்கள் மற்றும் எதிப்பு பேரணிகள் என்பன இடம்பெறுகின்றன. அவர்களது கோரிக்கைகளை இவ்வாறான வழியில்தான் வெளிப்படுத்துகின்றனர். இருந்தபோதிலும் அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களது கோரிக்கைகளுக்கு செவிமடுத்து அவர்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் முயற்சிப்போம். அந்த விடயத்தில் சம்பந்தப்படுபவர்கள் பொறுமை கடைப்பிடிப்பதும் அவசியமாகும். அவர்களது விடயத்தில் தலையிட்டு தீர்வு காண உதவுவதோடு பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுக்கத்தைப் பேணும் விடயத்தில் அவதானமாக இருக்கவேண்டும். ஒழுக்கத்தை மீறும் செயல்கள் நடைபெற்றால் அவற்றுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கையை தளர்த்த முடியாது.

இந்த மாணவர்களின் மோதலுக்கு மத்தியில் தங்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு எத்தனிக்கும் சந்தர்ப்பவாத அரசியல் சக்திகள் பற்றியும் நாங்கள் அறியாமலில்லை-என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா, பிரதித்தலைவர் பேராசிரியர் பி.எஸ்.எம். குணரத்ன, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எம்.நயீமுல்லாஹ், அமைச்சின் மேலதிக செயலாளர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)

# தமிழக அரசு முற்றாக செயலிழந்துவிட்டது!



## மு.க.ஸ்டாலின் சாடல்

சென்னை, ஜன. 03
தமிழக அரசு ஊழல் நிறைந்தும் செயலிழந்தும் கிடக்கின்றதென தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழக சட்டசபையின் நேற்றைய அமர்விலிருந்து தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர். இது குறித்து செய்தியாளர்களிடம் கருத்துரைத்த அவர் மேற்கண்ட குற்றஞ்சாட்டை முன் வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –
தமிழக அரசு செயலிழந்து கிடக்கின்றது. ஸ்டெர்லைட் ஆலை விவகாரம், கர்ப்பிணித்தாய்க்கு எச்.ஐ.வி. தொற்றுள்ள இரத்தம் செலுத்தப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் தமிழக அரசு தோல்வியடைந்துள்ளது.

மேலும், கஜா புயல் நிவாரணத்திற்கு மத்திய அரசு போதிய நிதியை வழங்கவில்லை. அதனை பெறமுடியாத நிலையில் மாநில அரசு உள்ளது. குட்கா ஊழல் உள்ளிட்ட புகார்களில் சிக்கியுள்ள விஜயபாஸ்கர் பதவி விலகியிருக்க வேண்டும் – என்றார். (ஐ)

# திருவாரூர் இடைத்தேர்தலை உடன் ஒத்திவைக்கவேண்டும்

## அ.தி.மு.கவினர் கோரிக்கை

சென்னை, ஜன. 03
பொங்கல் பண்டிகை நெருங்கும் நிலையில், திருவாரூர் தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெறுவது சிறந்ததல்ல என அ.தி.மு.க. மூத்தத் தலைவரான தம்பிதுரை தெரிவித்தார்.

சென்னை, விமானநிலையத்தில் நேற்றுச் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

திருவாரூர் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலை ஒத்திவைக்கவேண்டும். கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் இன்னும் வழங்கப்படாமல் இருக்கின்ற நிலையில், தேர்தல் நடத்துவது நல்லதல்ல.

பொங்கல் பண்டிகைக்கான நேரம் என்பதால், தற்போது திருவாரூரில் இடைத்தேர்தல் நடத்த வேண்டாமென்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. இது குறித்து தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டும் – என்றார். (ஐ)

# திருவாரூருக்கு மட்டும் அவசர தேர்தல் எதற்கு?

## வீரமணி கேள்வி

சென்னை, ஜன. 03
தமிழக சட்டப் பேரவையில் 20 இடங்கள் காலியாகவுள்ளபோது திருவாரூருக்கு மாத்திரம் அவசரமாக இடைத் தேர்தல் நடத்துவது ஏன் என திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

20 சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவிகள் காலியாக உள்ளன என்று தமிழ்நாடு சட்டப்பேரவை சபாநாயகர் தேர்தல் ஆணையத்துக்கு எழுதிச்சில மாதங்கள் – பலவாரங்கள் ஆகிவிட்டன.

பாதிக்கப்பட்டவர்களில் எவரும் உயர் நீதிமன்ற நீதிபதி (ஜஸ்டீஸ் சத்திய நாராயணா) தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு ஏதும் செய்யவும் இல்லை.

இந்நிலையில் 20 தொகுதிகளுக்குத் தேர்தல் நடத்தாமல் திருவாரூருக்கு மட்டும் 2018 ஓகஸ்ட் கருணாநிதி மறைவால் ஏற்பட்ட காலியிடத்தை நிரப்புவதில் மட்டும்



தனித்த அக்கறை காட்டுவதன் நோக்கம் தான் என்ன?

பின்னது கிடக்கட்டும் முன்னது 'க்யூ'வை உடைத்து சில 'குண்டர்கள்' முன்னே வந்து நிற்கும் காட்சிபோல, திருவாரூர் இடைத் தேர்தல் 2019 ஜனவரி 28 ஆம் திகதி நடைபெறும் என்று டிசெம்பர் 31 மாலை அறிவித்திடும் சட்டப்படி, நியாயப்படி, ஜனநாயகப்படி 30ஆம் நாள் அவகாசம் பற்றியெல்லாம் கவலைப்படாத திடீர் அறிவிப்பின் ரகசியம் தான் என்னவோ! திருப்பரங்குன்றத்திற்கு – நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றது என்ற சாக்கு 'ரெடிமேட்' ஆயுதமும் கையில் இருக்கலாம்

'மழை பெய்யும் ஆகவே தள்ளி வையுங்கள்' என்று தமிழக அரசு முன்பே தனது தலைமைச் செயலாளர் தேர்தல் ஆணையத்துக்கு எழுதியதுபோல இப்போது ஏதாவது கடித வேண்டுகோள் போயிருக்கிறதா? மழை புயல் முடிந்து விட்டது உடனே வையுங்கள் – என்று கடிதம் ஏதாவதுபோனதா?

தி.மு.கவைப் பொறுத்தவரை அது என்றும் தேர்தலுக்குத் தயாராக இருக்கிறது என்பது நாடறிந்த உண்மையே! 20 தொகுதிக்கு தேர்தல் வைக்காமல் இதற்கென்ன தனி அவசரம்? அவற்றையும் சேர்ந்தே வைத்தால் பல வகையில் குட்டிப் பொதுசட்டப்பேரவை தேர்தல்போன்று நடத்தினால், ஜனநாயகம் மேலும் காப்பாற்றப்படுவதுடன் இடைத்தேர்தல்கள் மட்டுமல்லாமல் தமிழக ஆட்சியாளருக்கு 'எடைத் தேர்தல்' களாகவும்கூட உணர்த்தும் தேர்தல்களாக இருக்குமே!

தமிழக அரசியல் கட்சிகளே இதில் நீங்கள் மேல் நடவடிக்கையாகக் குரல் கொடுத்து, ஜனநாயகத்தை உணர்த்துங்கள் – என்றுள்ளது. (ஐ)

# திருவாரூர் இடைத்தேர்தல்; உயர் நீதிமன்றத்தில் வழக்கு

திருவாரூர், ஜன. 03
திருவாரூரில் இடைத் தேர்தலை ஒத்திவைக்க உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருவாரூரைச் சேர்ந்த மாரிமுத்து என்பவரால் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கஜா புயலால் திருவாரூர் மக்கள் பல ஆவணங்களை இழந்துள்ளனர். ஆவணங்கள் இல்லாததால் பலருக்கு வாக்குரிமையை இழக்கும் நிலை உள்ளது என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்கக் கோரியதற்கு சென்னை உயர்நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

வேட்புமனுத்தாக்கல் இன்று ஆரம்பமாகி, 10 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது. வேட்புமனு பரிசீலனை எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இம்மாதம் 28 ஆம் திகதி தேர்தல் நடைபெற்று, வாக்குகெண்ணும் நடவடிக்கைகள் இம்மாதம் 31 ஆம் திகதி நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வெற்றுக் குடங்களுடன் பெண்கள் வீதி மறியல்!

## திருத்தணி அருகே நடந்தது



சென்னை, ஜன. 03
திருத்தணி அருகே குடிதண்ணீர் வழங்கக் கோரி வெற்றுக் குடங்களுடன் பெண்கள் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் நேற்றுக் காலை வீதி மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

திருத்தணி – சோளிங்கர் தேசிய நெடுஞ்சாலையிலேயே இவ்வாறு திடீர் வீதி மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அப்பகுதி மக்கள், கடந்த 13 நாள்களுக்கு மேலாக தங்களுக்கான குடிதண்ணீர் வழங்கப்படவில்லை என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பலமுறை தெரிவித்தும் எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை என்றும் கூறினர்.

இந்நிலையில், இந்தப் பகுதிக்கு வருகை தந்திருந்த டி.எஸ்.பி. சேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் பாபு மற்றும் அதிகாரிகள் வீதி மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

இதன்போது அவர்கள் குடிதண்ணீரைப் பெற்றுத்தர உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர். இதையடுத்து வீதி மறியலில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

கிராம மக்களின் இந்த திடீர் வீதி மறியல் போராட்டத்தால் அப்பகுதியில் சுமார் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

திருத்தணியை அடுத்த தாடூர் இருளர் கொலனியில் 100க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த 13 நாள்களுக்கு மேலாக அப்பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், அவர்கள் விவசாயக் கிணறு மற்றும் கூடுதல் விலை கொடுத்து குடிதண்ணீரை வாங்கும் நிலைக்கு ஆளாகப்பட்டுள்ளனர். இதன்காரணமாகவே அப்பகுதி மக்கள் வீதி மறியலில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கஜா புயல் நிவாரணப் பணிக்கு 13 ஆயிரம் கோடி ரூபா தேவை

## அமைச்சர் ஜெயக்குமார் தெரிவிப்பு



சென்னை, ஜன. 03
கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரண பணிகளுக்காக மேலதிகமாக 13 ஆயிரம் கோடி ரூபா தேவையென்று அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய அரசிடம் 15,600 கோடி ரூபா வழங்குமாறு பணித்தமைக்கு 1,146 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இது யானைப் பசிக்குச் சோளப்பொரி போல. இது பெரியதாக தெரிகிறதே தவிர, யானைப் பசியை போக்குவதாக இல்லை. நிரந்தர தேவைக்கு இன்னும் 13 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படுகின்றது.

தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்தத் தொகையை உடனடித் தேவைக்கு வேண்டுமானால் பயன்படுத்த முடியுமே தவிர, நிரந்தரத் தேவைக்கு இத்தொகை போதாது. இன்னும் 13 ஆயிரம் கோடி ரூபாவை வழங்க மத்திய அரசுக்கு தாம் அழுத்தம் கொடுக்கவேண்டும் எனக் கூறினார். (ஐ)

# வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் அமெரிக்காவுக்குக் கடும் எச்சரிக்கை



## தமது புது வருட உரையில் விடுத்தார்

அமெரிக்கா எங்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றால் புதிய வழியை வட கொரியா தேர்ந்தெடுக்கும் என்று அந்நாட்டு அதிபர் கிம் ஜோங் உன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு புதிய வருடம் பிறந்ததுள்ளத் தையடுத்து வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தனது நாட்டு மக்களுக்குப் புத்தாண்டு உரையை செவ்வாய்க் கிழமை ஆற்றினார். இதில் கிம் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் அமெரிக்காவுக்கு சில எச்சரிக்கைகளை விடுத்தார்.

இதில் கிம் பேசும்போது, உலக நாடுகளின் முன் னிலையில் எங்கள் நாட்டுக்கு அளித்த வாக்குறுதியை அமெரிக்கா ஒருவேளை செய்யத் தவறி எங்கள் மீது பொருளாதாரத்தடைகள் விதித்தால், நாங்கள் உங்களுக்கு அளித்த உறுதி மொழிகளைக் கைவிட்டு எங்கள் இறையாண்மையைப் பாதுகாக்க புதிய வழிகளைத் தேர்ந்தெடுப்போம் என்று கூறினார்.

இந்த நிலையில் கிம்மின் உரை குறித்து தென் கொரிய முன்னாள் அமைச்சர் கிம் யங் சியோக் கூறும் போது அமெரிக்காவுடனான பேச்சில் முன்னேற்றம் இல்லாத காரணத்தினால் கிம் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தி இருக்கிறார் என்று தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி, வடகொரியா 22 ஏவுகணைச் சோதனைகளை நடத்தியது. இதில் இரண்டு சோதனைகள் ஜப்பான் கடலுக்கு அருகில் நடத்தப் பட்டன. வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெ ரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கடுமை யாக எதிர்த்து வந்தன.

ஆனால், இந்த எதிர்ப்புகளைச் சற்றும் பொருட்படுத் தாமல் வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத ஏவுகணை சோதனைகளை நடத்தி வந்தது. இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தலைமையில் வட கொரியாவின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதி க்கப்பட்டன.

எனினும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடை களைப் பொருட்படுத்தாமல் வடகொரியா அவ்வப்போது ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வந்தது.

இந்த நிலையில் தென்கொரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வடகொரியா பங்கேற் றது. அது முதல் வடகொரியா - தென் கொரியா உறவில் இணக்கம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து ட்ரம்ப் - கிம் இடையே சிங்கப்பூரில் சந்திப்பு ஏற்பட்டது. சில இணக்கங்கள் காணப்பட்டன. அதில் முன்னேற்றம் இல்லாத நிலையிலேயே தமது அதிருப்தியை வட கொரிய அதிபர் இப்போது வெளியிட்டுள்ளார் எனக் கருதப்படு கிறது.

மேற்படி சந்திப்பில் அணு ஆயுதங்களை அழிக்க வடகொரியா சம்மதம் தெரிவித்தது. எனினும் தொடர்ந்து அமெரிக்கா - வடகொரியா இடையே அணு ஆயுத சோதனைகள் தொடர்பான மோதல் நடந்து கொண்டு தான் இருக்கிறது.

# இத்தாலியில் நிலநடுக்கம்

இத்தாலி நாட்டில் நள்ளிரவில் மித அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது.

இத்தாலி நாட்டின் அப்ரூஜ்ஜோ பகுதியில் காலேலாங்கோ நகர் அருகே நள்ளிரவில் மித அளவிலான நிலநடுக் கம் ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.1 ஆக பதிவாகி உள்ளது. இதுபற்றி தேசிய புவிஇயற்பியல் மற்றும் எரி மலையியல் அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில், நிலநடுக்கம் காலேலாங்கோ அருகே 10 மைல்கள் ஆழத்தில் மையம் கொண்டுள்ளது எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கத்தினால் பாதிக்கப் பட்டவர்கள் அல்லது பொருட்சேதம் ஆகியவை பற்றிய தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

# ரஷ்யாவில் மினி பஸ் திடீரென்று தீப்பற்றி வெடித்ததில் மூவர் சாவு

ஏகடெரீன்பர்க்,ஜன.03

ரஷ்யாவில் மினி பஸ் ஒன்று தீப்பிடித்து வெடித்ததில் 3 பேர் பலியாகி உள்ளனர்.

ரஷ்ய நாட்டில் மேக்னிடோகார்ஸ்க் என்ற நகரில் கார்ல் மார்க்ஸ் மற்றும் பிரவடா ஆகிய இரு தெருக்கள் சந்திக்கும் பகுதியில் சென்று கொண்டிருந்த மினி பஸ் ஒன்றில் தீப்பிடித்து உள்ளது.

அதில் 3 பேர் பயணம் செய்து உள்ளனர். அதில் 2 வாயு சிலிண்டர்களும் இருந்துள்ளன எனக் கூறப்படு கிறது.

இந்த நிலையில், மினி பஸ் தீப்பிடித்ததில் அதில் இருந்த வாயு சிலிண்டர்கள் வெடித்துள்ளன. இந்த சம்பவத்தில் அதில் இருந்த 3 பேரும் பலியாகி உள்ளனர். இதனை உள்துறை அமைச்சகமும் உறுதி செய்துள்ளது.

இந்தச் சம்பவம் நடந்த பகுதி அருகே கடந்த திங்கட் கிழமை குடியிருப்புக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்தது. இதில் 9 பேர் பலியாகினர். 6 பேர் மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# 2020 அமெ. ஜனாதிபதித் தேர்தல் களத்தில் ட்ரம்புக்குப் போட்டியாக டெம் எலிஸபெத்

அடுத்த ஆண்டு நடை பெறும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், டெம் எலிஸ பெத் போட்டியிட உள்ளார்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு (2020) ஜனாதி பதித் தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த தேர்தலில் தற்போ தைய ஜனாதிபதி ட்ரம்ப் குடியரசு கட்சி சார்பில் மீண்டும் களம் காண்கிறார்.

இந்த நிலையில் அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்த லில் தான் போட்டியிடப்போகிறார் என ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரும், செனட் சபை பெண் உறுப்பின ருமான டெம் எலிஸபெத் அறிவித்துள்ளார்.

69 வயதான டெம் எலிஸபெத் அரசியலில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர். இவர் ட்ரம்புக்கு பலமான போட்டியாளராக திகழ்வார் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

# 4 நவீன கடற்படைக் கப்பல்கள் சீனாவிடமிருந்து பாகிஸ்தானுக்கு

பாகிஸ்தானுக்காக சீனா நான்கு மிக நவீன கடற்படைப் போர்க் கப்பல்களைத் தயாரிக்க உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தானுக்கு மிக அதிக அளவு ஆயுதம் வழங்கும் நாடாக சீனா இருந்து வருகிறது. இருநாடுகளும் ஒன்றி ணைந்த ஜே.எவ். தண்டர் என்ற ஒற்றை என்ஜின் பன்முக போர் விமானத்தை தயாரிக்கின்றன.

இந்த நிலையில் இந்திய பெருங்கடலில் தனது ஆற் றலை உறுதிப்படுத்துவதற்காக ஆயுத ஒப்பந்தத்தின் ஒரு பாகமாக அதன் கூட்டாளி பாகிஸ்தானுக்கு சீனா நான்கு மிக நவீன கடற்படை போர் கப்பல்களைத் தயா ரித்துக் கொடுக்க உள்ளது. சீன அரசின் கப்பல் நிர்வாகக் குழு இதனைத் தெரிவித்ததாக சீனத் தினசரி குறிப்பிட்டுள்ளது.


இந்த நவீன கடற்படை போர் கப்பல்களில் நவீன கண்டறிதல் மற்றும் ஆயுதம் கொண்ட அமைப்புகள், கப்பல் எதிர்ப்பு அமைப்பு, நீர்மூழ்கி கப்பல் மற்றும் விமான பாதுகாப்பு நடவடிக்கை அமைப்புகள் இதில் இடம் பெற்று இருக்கும். இந்த கப்பலில் சீன கடற்படை மிகவும் மேம்பட்ட வழிகாட்டுதல் ஏவுகணை ஃப்ரிகேட் இருக்கும் என கூறப்பட்டு உள்ளது.

கப்பல் எந்த வகை எனக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அது ஙாங்காயில் உள்ள ஹூடாங் - சோங்ஹூவா துறைமுகத்தில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த கப்பல் வகுப்பு வகை 054AP. இது சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் (PLA) கடற்படைத் தளத்தின் 054A வகை அடிப்படையிலானது என பாகிஸ் தானிய கடற்படை கூறியதாக சீனத் தினசரி மேற்கோள் காட்டி உள்ளது.

# இந்தோனேசியாவில் நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை - 15

## மேலும் 20 பேரைக் காணோம்; 30 வீடுகள் மண்ணுக்குள்



ஜகார்த்தா,ஜன.03

இந்தோனேசியாவில் ஏற்பட்ட நில சரிவில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்வடைந்து உள்ளது.

இந்தோனேசியாவில் ஜாவா தீவின் மேற்கே அமைந்த சுகாபுமி மாவட்டத்தில் திங்களன்று இடைவிடாமல் கனமழை பெய்தது. இதனால் ஏற்பட்ட வெள்ளம் ஊர்களுக்குள் புகுந்தது. இதனைத் தொடர்ந்து பல இடங்களில் பயங்கர நிலச்சரிவுகள் ஏற்பட்டன.

சிர்னாரேஸ்மி என்கிற கிராமத்தில் 30 வீடுகள் மண்ணில் புதைந்து போயின. பாதிக்கப்பட்ட பகுதி களில் இராணுவ வீரர்கள், பொலிஸார் மற்றும் மீட்பு குழுவினர் தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் 9 பேர் வரை பலியாகி இருந்தனர். இந்த நிலையில், நிலச்சரிவில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்வடைந்து உள்ளது. 3 பேர் காயமடைந்துள்ளனர். 20 பேரை இன் னும் காணவில்லை.

அவர்களைத் தேடும் பணியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி தேசிய பேரிடர் மேலாண் அமைப்பின் செய்தி தொடர்பு அதிகாரி சுடோபோ பர்வோ நுகுரோஹோ கூறும்பொழுது, மண் ணில் புதைந்து போனவர்களை மீட்கும் பணியில் மீட்பு குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், சிறிய அளவில் நான்கு நில சரிவுகள் ஏற்பட் டுள்ளன. மழை பெய்யும்பொழுது மற்றொரு நில சரிவு ஏற்பட கூடிய ஆபத்தும் உள்ளது. இத னால் மீட்பு குழுவினர் பணியை தொடர்வதில் அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளது. - எனத் தெரிவித் துள்ளார்.

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**கணிதப் பிரிவு -**
தெ.கிருன் 3ஏ, சி.கயானானன் 3ஏ, சி.யாழினி 3ஏ, த.லக்சியா 2ஏபி, ம.மதீசன் 2ஏபி,ச.சுகேசினி ஏ2பி, ச.சங்கர்ஜி ஏ2பி, பா.தினுசன் ஏபிசி, கு.அகித் ஏபிசி, த.தசிகா ஏ2சி, ரா.தட்சாயினி ஏ2சி,அ.அயூசன் ஏசிஎஸ்,யோ.பிந்துசனி 2பிசி,ந.ஆருஜன் 2பிசி,அ.நியானந்தி 2பிசி,சி.பிரவீனன் 2பிசி,சி.சௌமினியன் 2பிசி,த.தனுசியா 2பிசி,இ.பிரதீப் 2பிசி,மௌ.மயில்றெஜன் 2பிசி,ம.ஈசராஜ் 2பிஎஸ்,பா.விஷ்ணுகன் பி2சி,யா.கபீசன் பி2சி,சி.மதிலன் பி2சி, இ.அபிநயா பி2சி,ச.வித்தகன் பி2சி, ரா.சுதர்சிகா பி2சி,த.ஜஸ்மினா பி2சி, ம.அஜித்கரன் பி2சி,பு.மேதுலன் 3பி,க. கஜீபன் 3பி, ச.தர்சிகன் பிசிஎஸ், கி.தனுசாந் பிசிஎஸ்,சி.ஆரமுதன் பிசிஎஸ், அ.அயூசன் ஏசிஎஸ் த.யதுதர்சா 2பிசி.

**உயிரியல் பிரிவு -**
கு.கம்சிகா 3ஏ,தி.டினோஜன் 2ஏபி, சி.சோபனா 2ஏபி, வி.மதனிகா ஏபிசி, ம.சுர்த்தியா ஏ2சி,க.நித்திலா 3பி,சி.கோபிகா 2பிசி,நா.நவீன்சங்கர் 2பிசி,வ.கிரியாலினி 2பிசி, சி.சங்கவி 2பிசி, கு.சத்தியவாகினி பி2சி

**பொறியியல் தொழிநுட்பம் -**
தேவதாசன் சுஜிகரன் ஏ2பி, கந்தசாமி சகீலன் 2ஏபி, விஜயரத்தினம் ஸ்ரீசங்கரன் ஏபிசி, விநோதலிங்கம் விபூசனன் 2பிசி, கஜேந்திரன் பத்மஜன் பி2சி, இராசமோகன் கவிராஜ் 3சி, மோகனதாஸ் சசிவராஜ் பி2சி

**உயிர்முறைமை தொழல்நுட்பம்**
மனோகரன் மாதுமை ஏ2பி,குகதாசன் மதுஷா 2பிசி,பத்மநாதன் ரதீபன் பி2சி, கோணேந்திரன் டினோஜா பி2சி.

**கலைப் பிரிவு**
சி.நிலக்ஷனா 3ஏ, இ.ஹரிநி 3ஏ, எ.பிரியந்தி 3ஏ, அ.அனுஷா 3ஏ, பா.தபோதினி 3ஏ, இ.தமிழினி 2ஏபி, ப.தமிழினி 2ஏபி,கு. இந்துஷா 2ஏபி, க.சிந்துஜன் 2ஏபி, சி.கலையரசன் 2ஏபி, டே.கிருத்திகா ஏபிசி, சு.சங்கவி ஏபிசி, சி.கலையரசி ஏபிசி, ச.தனோஜன் ஏபிசி, ந.சனோஜன் ஏபிசி, செ.சரண்யா ஏ2சி, ந.கானப்பிரியா ஏ2எஸ்.

**வர்த்தகப் பிரிவு -**
சி.தர்மிலன் 3ஏ,அ.சாம்பவி 3ஏ,சி.கஜீபன் 2ஏபி,ரா.அபிஷேக் 2ஏபி,சி.டிலக்ஷனா 2ஏபி,சு.சாருப்பிரியா ஏ2பி,வி.ஜானுகா 3பி,கி.கிரு;ணாங்கி 2பிசி, ம.கஜீபா 2பிசி,ரா.தன்சிகா 2பிசி,சி.திவ்யா 2பிசி,ப. சங்கவி பி2சி, இ.றுபேக் பி2சி, ஞா.மிதுரா பி2சி,ப.நித்யா பிசிஎஸ்.

## யா/யூனியன் கல்லூரி

**விஞ்ஞானப் பிரிவு -**
சி.சிவதரன் ஏபிசி,

**வணிகப் பிரிவு-**
வ.சாந்தகுமார் ஏபிசி

**கலைப் பிரிவு -**
த.அன்றூட்ஜக்சன் 3ஏ, அ.நிசன் 3ஏ, சு.சுவிஸ்ரன் 2ஏசி,ம.கோசலா ஏ2பி, சி.மேரிஜஸ்மினி ஏ2பி, ம.தனுயா 3பி, நி.நிவேதிகா 2ஏபி.

## யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி

**கணித பிரிவு -**
பி.தனுசன் பி2சி, உ.பிரகாஸ் பி2எஸ், பா.யுகேந்திரன் 2சிஎஸ்,

**உயிர்முறைமைகள் தொழில் நுட்ப பிரிவு**
சி.லவன் 2பிசி, ர.துசிந்தன் 2பிஎஸ், சு.சுகேந்திரன் பி2சி, சு.சோபாசினி பி2சி, ஸ்ரீ.துவாரகா 3சி, ஜெ.பிரியங்கன் 3சி, ர.யாதவி 3சி

**பொறியியல் தொழில் நுட்பப் பிரிவு**
ஞா. அபிராம் ஏ2பி, செ.துஸ்யந்தன் 2பிசி, சு.பிரசாத் பி2சி, யோ.ஜனுசிகா பி2சி, ம.கேவின்ஸ்லெ போன் 3சி,

**வணிகப் பிரிவு -**
இ.ஹரிஸ்பாபு 2ஏபி, ரா.சயருசன் ஏபிசி, ச.தனா 3பி, த.ரிஜீபன் 2பிஎஸ், மு.கஜிந்தன் பி2சி,

**கலைப் பிரிவு -**
சி.டிலக்சன் பி2சி, அ.கமில்ரன் பி2சி.

## யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி

**விஞ்ஞானப்பிரிவு -**
சா.நிரோசா2ஏபி, நே.சிந்துஜன்– 2ஏசி, சு.சுனேத் ஏ2பி, சா.கிருஸ்கா –ஏபிசி

**கணிதப்பிரிவு -**
சி.லக்ஷிகா 3ஏ, இ.ராகுல் ஏ2பி, ஜெ.ஜெயன் 2ஏசி, ச.வீரேஸ்வரன் ஏபிசி, சு.ரம்யா ஏபிசி, பா.பவித்திரா – ஏபிசி, இ.சோபிகா ஏ2சி, செ.சிந்துசன் ஏசிஎஸ், பா.லக்ஷன் பி 2சி, யோ.ரகீசன் ஏசிஎஸ், எஸ். சங்கவி – ஏ சி எஸ், சு.சுபா பிசிஎஸ், கி.யுவேகா பிசிஎஸ், கி.இலக்கணன் – ஏசிஎஸ்.

**பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு**
செ.கோகுலன் பி2சி, தே.வதுஷா 2பிசி, உ.கிருஸ்ணாத் பிசிஎஸ், பி.பாணுகோபன் 3 சி, ந.ஜெயலக் பி 2எஸ், ரு.டிலக்ஷன் 2சிஎஸ், செ.இசையரன் 2 சி எஸ், ச.ஆத்மன் 2சி எஸ், ஞா.பானுசா 2 சி எஸ், க.நிலக்ஷன் பி2எஸ், சு.முகுந்தன் 2சிஎஸ், த.யதுஷன் சி2 எஸ், ச.சஜீன் – 3 எஸ்

**உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு**
சு.ஜெனிற்றா ஏபிசி, சி.கிஷானி ஏபிசி, சி.பேபி ஷாலினி2பிசி, இ.பூர்வீகா பி2சி, சி.ராஜாஜி 3 சி, த.கலையரசி பிசிஎஸ், லோ. நிமணன் பிசிஎஸ், பா.அர்ச்சனா பிசிஎஸ், பி.கீர்த்திகா பி2சி,த.தர்சிகா பிசிஎஸ், சு.சுகிதா 3 சி, ம.அனித்தா பி2சி, சி.இந்துஜா 2சி எஸ், சி.சஞ்சீவன் 2சிஎஸ், சி. அருள்ராஜ் 2 சிஎஸ், ம.கஜிதா சி2எஸ், சி.ஜனனி 2சிஎஸ்

**வணிகப்பிரிவு**
ஜெ.சூரியகாந் 3 ஏ, சி.அபினாஸ் 3 ஏ, மோ.நிதுஷா 3பி, அ.லெனின்ராஜன் 3 பி, ஐ.ஐங்கரன் 3 பி, இ.விதுஷன் ஏபிசி, வி.விதுஜா பி2சி, ச.அருள்ராஜி 2பிசி, சி.பிரகலாதன் 2 பிசி, ச.சங்கீதன் 2 பிசி, மு.கார்த்திகா பி2சி, கு.லக்சனா பி2சி, சி.கோகுலன் பி2சி

**கலைப்பிரிவு**
பே.நிதுஷா 2 பிஎஸ், த.யசோதா பி2சி, க.நாகரூபிகா பி2சி, ர.டிலானி – ஏசிஎஸ், கி.பிரசாந்தன் பிசிஎஸ், சி.அனித் பிசிஎஸ்

---

# எதிர்பார்ப்புகளை சுமந்து வரும் 2019

விடைபெற்றுச் சென்ற 2018ஆம் ஆண்டின் நெருக்கடிகள் யாவும் 2019ஆம் ஆண்டில் எதிர்நோக்கவேண்டிய சவால்களை எம்முன் காட்டிநிற்கின்றன.

அரசியல், பொருளாதாரம், சமூக மாற்றம் போன்ற விடயங்களில், கடந்த 2018ஆம் ஆண்டு எதிர்பாராத எதிர்மறை மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன என்பதை யாவரும் அறிவோம்.

முதலாவதாக, ஒரு நாட்டின் மிக முக்கியமான கருதுகோளான பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சிப்பாதையில் சென்றது. பொருள்களின் விலை அதிகரித்து, மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்து என வாழ்வியல் சூழல் இருண்ட யுகத்தில் காணப்பட்டதெனலாம். வரலாற்றில் என்றும் இல்லாத அளவிற்கு ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியை நோக்கிச் சென்றதோடு, இன்றும் அந்நிலை தொடர்கின்றது.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, கடந்த காலங்களை போலவே வார்த்தைகளுக்குள் தம்மை வரையறுத்துக் கொண்டது. தீர்வு விடயத்தில் மக்களின் காத்திருப்பு இந்த வருடத்திலும் தொடர ஆரம்பித்துவிட்டது.

காணி விடுவிப்பு மற்றும் காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினைகளிலும், 2018 எந்தவித முன்னேற்றத்தையும் தரவில்லை. வடக்கிலுள்ள சுமார் 14,000 ஏக்கர் காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்க, அவற்றில் வெறும் 1,099 ஏக்கர் காணிகளை மாத்திரம் எதிர்வரும் 2 வாரங்களுக்குள் விடுவிப்பதாக இலங்கை இராணுவம் கூறியுள்ளது.

எனினும், 2018 டிசெம்பருக்குள் வடக்கு – கிழக்கில் படையினரிடமுள்ள சகல காணிகளும் அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படுமென ஜனாதிபதி அளித்த வாக்குறுதிக்கு என்னவாயிற்று என்ற கேள்வியை இந்த இடத்தில் கேட்கவேண்டியுள்ளது.






மறுபுறம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினை கண்ணாம்பூச்சி ஆட்டத்தை போலுள்ளது. எத்தனையோ ஆர்ப்பாட்டங்களை நடத்தி, கிளர்ந்தெழுந்து, இறுதியில் 1000 ரூபாய் சம்பள அதிகரிப்பு எட்டாக்கனியாகி விட்டது. தொழிற்சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் காணப்படும் குடுமிபிடிச் சண்டையில் பாதிக்கப்பட்டது என்னவோ தோட்டத் தொழிலாளர்கள்.

இந்த அத்தனை பிரச்சினைகளையும் மழுங்கடிக்கும் வகையில், ஆட்சிமாற்றம் ஏற்பட்டு இலங்கை அரசியலில் பிரளயத்தையே ஏற்படுத்திவிட்டது.

இந்த அரசியல் சூழ்ச்சியானது, அரசியல்வாதிகளுக்குச் சிறந்த பாடத்தையும் கற்றுத்தந்துள்ளது. அரசியல் சூழ்ச்சியின் போது நீதிமன்றமும் நாடாளுமன்றமும் சுயாதீனமாக செயற்பட்டதில், அந்த சதி முறியடிக்கப்பட்டு இன்று ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சி தொடர்கின்றது. ஆனால், நல்லாட்சி தோற்கடிக்கப்பட்டமை தமிழ் மக்களுக்கு மிகவும் பாதகமான நிலையை ஏற்படுத்திவிட்டது. நல்லாட்சியின் எதிர்பார்ப்புகள் சிதறடிக்கப்பட்டபோதிலும், அதன் பின்னரான ஆட்சியை நிர்ணயிப்பதில் சிறுபான்மை கட்சிகள் ஆதிக்கம் செலுத்தியதை கண்டோம். அதனை ஆட்சியாளர்களும் உணர்ந்திருப்பர். அதுமட்டுமன்றி, மக்களின் சக்திக்கு அப்பால் ஆட்சியாளர்கள் தான்தோன்றித்தனமாக செயற்பட முடியாதென்பதையும் அரசியல்வாதிகள் உணர ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

இறுதியாக வடக்கு – கிழக்கில் ஏற்கனவே காணிகளையும், சொத்துக்களையும், சொந்தங்களையும் பறிகொடுத்த மக்களுக்கு மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக கடும் வெள்ளம் புரட்டிப் போட்டது. வடக்கில் சுமார் ஒரு இலட்சம் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டனர்.

ஆக, 2018ஆம் ஆண்டு சோகங்களும், சூழ்ச்சிகளும், நெருக்கடிகளும், கெடுபிடிகளும் நிறைந்த ஆண்டாக அமைந்ததென்பதே உண்மை.

இவற்றின் தொடர்ச்சியோடு பயணிக்கப்போகும் 2019ஆம் ஆண்டு எவ்வாறான சவால்களை எதிர்கொள்ளப் போகின்றது?

ஒருபுறம் மாகாண சபைத் தேர்தல் தாமதமாகி வருகின்ற நிலையில், மறுபுறம் பொதுத் தேர்தலுக்குச் செல்வது தொடர்பாகவும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. எப்படிப் பார்த்தாலும், 2019ஆம் ஆண்டு தேர்தல் வருடமென ஆட்சியாளர்கள் கூறியுள்ளனர்.

இத்தனை காலமும் ஆட்சியாளர்களை நம்பி வாக்குகளை வழங்கிய மக்கள் அதன் பயன்களை அனுபவித்தார்களா? அவ்வாறாயின் இத்தேர்தல்களின் முடிவுகள் எவ்வாறு அமையுமென்பதை, நிச்சயமாக முதல் மூன்று அல்லது நான்கு மாதங்கள் தீர்மானிக்கலாம். ஆனாலும், ஒரு நீண்டகால, நிலையான தீர்வை எதிர்பார்த்துள்ள மக்கள், குறுகிய கால நன்மைக்காக இம்முறையும் தமது வாக்குகளை வழங்குவார்களா?

நம்பிக்கையே வாழ்க்கை என்பதைப் போல, நன்மை நடக்குமென நம்பி 2019 இற்குள் காலடி எடுத்துவைப்போம்.

**கலாவர்ஷ்னி கனகரட்ணம்**

காலைக்கதிர் Kalaikkathir



# நாடு முழுவதையும் வாட்டும் கடும் குளிர்

கொழும்பு, ஜன. 03

நாடு முழுவதும், குறிப்பாக வடக்கு, வடமத்திய, மத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடுத்த சில நாட்களுக்குக்குளிரானவானிலைநிலவும்எனஎதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.



அதில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:-

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை தொடர்ந்து நிலவும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

எனினும் இரத்தினபுரி மாவட் டத்தில் சில தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

மேல் மற்றும் ஊவா மாகா ணங்களிலும் அம்பாறை, புத் தளம், கேகாலை மற்றும் அம் பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத் துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதி கரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார் க்கப்படுகின்றது.

மத்திய மாகாணத்திலும் இரத் தினபுரி மாவட்டத்திலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க் கப்படுகின்றது. நாட்டைச்சூழவுள்ள கடற்பரப்புகளில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

நாட்டைச்சூழவுள்ள கடற்பரப்பு களில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தி யாலத்துக்கு 30-40 கிலோமீற்றர் வரை காணப்படும்.

மன்னாரிலிருந்து புத்தளம் மற்றும் கொழும்பு ஊடாகக் களுத் துறை வரையான கரையோரத் துக்கு அப்பாற்பட்ட கடற் பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப் போது மணித்தியாலத் துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் அவ் வேளைகளில் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

மாத்தறையிலி ருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரை யோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப் போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் அவ்வேளைகளில் கடல் ஓரளவு கொந்தளிப் பாகவும் காணப்படும் - என்றுள்ளது. (ஐ)



## 50 அடி பள்ளத்தில் பாய்ந்தது லொறி

### சாரதி படுகாயம்

கொழும்பு, ஜன. 02

ஹற்றன், பொகவந்தலாவ பிரதான வீதியில் - கிளங்கன் பகுதியில் வைத்து லொறியொன்று 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கண்டியிலிருந்து பொகவந்தலாவவுக்கு கோழி ஏற்றிச்சென்ற லொறியே நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் பாதையை விட்டுவிலகி இவ்வாறு விபத்துக்குள்ளானதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியில் சாரதி உட்பட இருவர் பயணித்த போதிலும் சாரதிக்கே படுகாயம் ஏற்பட்டு, அவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். அதிக வேகமே விபத்துக்கான காரணமென்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ஜே.வி.பி. கிளர்ச்சியை ஒடுக்கிய டி.ஐ.ஜி. உடுகம்பொல மரணம்

கொழும்பு, ஜன. 03

வடக்கிலும் தெற்கிலும், ஏராளமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் எனக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய, இலங்கையின் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல நேற்று முன்தினம் மரணமானார்.



யாழ்ப்பாணத்தில்பொலிஸ் கண்காணிப்பாளராக இருந்த போது, வடக்கில் விடுதலைப் புலிகளை ஒடுக்கும் நடவடிக் கைகளில் தீவிரமாக ஈடுபட்டி ருந்த உடுகம்பொல, 1989 இல், தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச் சியை ஒடுக்குவதில் முக்கிய பங்காற்றினார்.

உடுகம்பொலவின் கீழ் உருவாக்கப்பட்ட சிறப்புப் பொலிஸ்குழு ஜே.வி.பி. உறுப் பினர்களை வேட்டையாடுவதிலும், கிளர்ச்சியை ஒடுக் குவதிலும் தீவிர பங்காற்றியிருந்தது.

இதன்போது, ஈவிரக்கமற்ற சித்திரவதைகளையும், மோசமான மனித உரிமை மீறல்களையும் புரிந்தார் என உடுகம்பொல மீதும் இலங்கை பொலிஸ் மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

எனினும், இவருக்கு எதிராக எந்த நீதி விசாரணை களும் முன்னெடுக்கப்படவில்லை. 40 ஆண்டுகாலம் இலங்கை பொலிஸ் பணியாற்றிய இவர், தனது 83 ஆவது வயதில் நேற்று முன்தினம் மரணமானார். (ஐ)

## புத்தாண்டில் 500 பேர் காயம்!

கொழும்பு, ஜன. 03

புதுவருடப் பிறப்பையடுத்து பல்வேறு சம்பவங்களால் காய மடைந்த சுமார் 500 பேர் வரை கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

எவ்வாறாயினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருப்பதாகக் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சமிந்த சமரக்கோன் கூறினார்.

பட்டாசு ஒன்றை வாயில் வைத்து எரிய வைத்ததால் காய மடைந்த வெளிநாட்டுப் பிரஜை ஒருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

45 வயதுடைய துருக்கி நாட் டுப் பிரஜை ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார். (ஐ)

## சிறிமேவன் ரணசிங்கவிடமிருந்து வாளைப் பெற்றார் பியல் சில்வா!



கொழும்பு, ஜன. 03

இலங்கைக் கடற்படை யின் 23 ஆவது தளபதியாக வைஸ் அட்மிரல் பியல் டி சில்வா நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றுள்ளார்.

கடற்படைத் தலைமை யகத்தில் நடந்த நிகழ்வில் அவர் தனது கடமைகளை ஏற்றுக் கொண்டார்.

பதவியில் இருந்து ஓய்வு பெற்ற கடற்படைத் தளபதி அட்மிரல் சிறிமேவன் ரண சிங்க, கடற்படைத் தளபதிக் குரிய உத்தியோகபூர்வ வாளை, வைஸ் அட்மிரல் பியல் டி சில்வாவிடம் கைய ளித்தார்.

இதையடுத்து, அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவை வழியனுப்பும் நிகழ்வும், புதிய கடற்படைத் தளபதிக்கான வரவேற்பு மற்றும் பதவி யேற்பு நிகழ்வும் இடம்பெற்றன. (ஐ)

## புத்தாண்டிலும் ஆயுததாரிகளின் வெறியாட்டம் தொடர்கின்றது!

### களுத்துறையில் ஒருவர் படுகாயம்

கொழும்பு, ஜன. 03

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட காலி வீதி, தொட்டுபல சந்திக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.35 மணியளவில் கார் ஒன்றில் வந்த இருவரால் ஹோட்டல் ஒன்றுக்கு எதிரில் உள்ள வீதியில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாகக் காணப்பட்ட முரண்பாடு காரணமாகவே இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

சந்தேகநபர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய் வதற்காக பொலிஸார் விசாரணை களை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு, கொட் டாஞ்சேனை- ஜம்பட்டா வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ)

## 257 வீதிகள், 57 பாலங்கள் வெள்ள இடரினால் சேதம்

### கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும்





கிளிநொச்சி, ஜன. 03

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள இடர் காரணமாக 257 வீதிகளும், 57 பாலங்களும் சேதமடைந்துள்ளன என மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபி விருத்தித் திணைக்களம், பிரதேச சபைகள், மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள வீதிகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன.

இவற்றுள் பல வீதிகள் மிகவும் மோசமாக வும், ஏனையவை பகுதியளவிலும் சேதமுற் றுள்ளன.

இவ்வாறு சேதமுற்றுள்ள வீதிகளை விசே நிதி ஒதுக்கீட்டின் கீழ் விரைந்து புனரமைக்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்எனவும், இல்லை யெனில் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குப் பெரும் இடையூறாகக் காணப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)



# ரியல் மட்ரிட் இரசிகர்களுக்கு முன்கூட்டிய புத்தாண்டு பரிசு!

ஸ்பெயினின் முன்னணி உதைபந்து கழக அணியான ரியல் மட்ரிட் அணி வீரர்கள், தங்களது இரசிகர்களுக்கு முன்கூட்டிய புத்தாண்டுப் பரிசை வழங்கியுள்ளனர்.

பிறந்திருக்கும் புத்தாண்டை இரசிகர்களுடன் கொண்டாடும் வகையில், நேற்று முன் தினம் ரியல் மட்ரிட் அணி வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

நீண்டதொரு பயிற்சியில் ஈடுபட்டிருந்த வீரர்கள், இரசிகர்களுக்கு முன்கூட்டிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு, அவர்களுடன் செல்பியும் எடுத்து மகிழ்ந்தனர்.

மிகப் பிரபலமான அணியான ரியல் மட்ரிட் அணி, ஆண்டை சம்பியன் கிண்ணத்துடன் நிறைவு செய்துள்ளமையை இங்கு நினைவுக்கூர வேண்டியது அவசியமாகும்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற பிபா கழகங்களுக்கிடையிலான உலகக்கிண்ணத் தொடரில், நான்காவது சம்பியன் பட்டத்தையும், தொடர்ச்சியான மூன்றாவது சம்பியன் பட்டத்தையும் ரியல் மட்ரிட் அணி வென்று முத்திரை பதித்தது.

எனினும், ரியல் மட்ரிட் அணி சிறந்த முடிவுகளை எட்டியபோதிலும், 2018ஆம் ஆண்டு ரியல் மட்ரிட் அணிக்கு ஒரு கடினமானஆண்டாக இருந்தது என்பதே உண்மை.

அந்த வகையில், ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரராக திகழ்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, இத்தாலியின் ஜுவெண்டஸ் அணிக்கு மாறினார். அத்தோடு அணியின் பயிற்சியாளராக திகழ்ந்த ஷினிடைன் ஷிடேன் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகினார். இவர்கள் இருவரின் பேரிழப்பும் ரியல் மட்ரிட் அணிக்கு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகவுள்ளது.

ஷிடேனுக்கு பிறகு முன்னாள் ஸ்பெயினின் தேசிய பயிற்சியாளராக இருந்த ஜுலென் லோபீட்டிகு புதிய பயிற்சியிளாராக நியமிக்கப்பட்டார். எனினும் அவரின் பயிற்சியில் அணி நிர்வாகம் திருப்தி கொள்ளாமையினால், அவரை அணிநிர்வாகம் பதவியிலிருந்து நீக்கியது.

இதனையடுத்து, முன்னாள் ரியல் மட்ரிட் அணியின் மத்தியகள வீரரும், ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் வீரருமான சாண்டியாகோ சொலாரி அணியின் பொறுப்பேற்றார். தற்போது சொலாரியின் பயிற்சியின் கீழ் ரியல் மட்ரிட் அணி குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

பிறந்திருக்கும் புத்தாண்டின் முதல் போட்டியில், ரியல் மட்ரிட் அணி, எதிர்வரும் 4ஆம் திகதி வில்லாரியல் அணியை எதிர்கொள்ளவுள்ளது. (ஐ)

# சிட்னி டெஸ்டில் களமிறங்குகின்றார் தமிழக வீரர் அஸ்வின்



சிட்னியில் நடைபெற உள்ள ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா– ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி சிட்னியில் இன்று தொடங்குகிறது. இந்தத் தொடரில் 2–1என்ற வெற்றி கணக்கில் இந்தியா முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் சிட்னி டெஸ்டில் விளையாட உள்ள 13 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு தலைவராககோஹ்லியும்,துணைத் தலைவ ராக ரஹானேவும் செயல்பட உள்ளனர். மேலும் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் இதில் இடம் பிடித்துள்ளார்.

**இந்திய அணி விபரம்**

விராட் கோஹ்லி (கப்டன்), ரஹானே, கே.எல்.ராகுல், மயங்க் அகர்வால், புஜாரா, ஹனுமா விஹாரி, ரிசப் பண்ட், ரவீந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ், அஸ்வின், ஷமி, பும்ரா, உமேஷ் யாதவ். (ஐ)



# மூன்றாவது குழந்தைக்கு தந்தையாகும் வோர்னர்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர் டேவிட் வோர்னர், 3ஆவது குழந்தைக்கு தந்தையாகப் போவதை உறுதிபடுத்தியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கியதால், ஓர் ஆண்டு தடை விதிக்கப்பட்டது. விரைவில் இவரது தடைக்காலம் முடிவடைவதைத் தொடர்ந்து, வோர்னர் அணிக்கு திரும்புவதில் எந்தச் சிக்கலும் இருக்காது என்று ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வோர்னர் மற்றும் அவரது மனைவி கேண்டிஸ் தங்களது குடும்பத்திற்கு மேலும் ஒரு உறுப்பினர் வரப்போகிறார் என்பதை தெரிவித்துள்ளனர். அதாவது இந்தத் தம்பதிக்கு இரண்டு குழந்தைகள் உள்ள நிலையில், மேலும் ஒரு குழந்தைக்கு வோர்னர் தந்தையாக உள்ளார்.

இது குறித்து வார்னரின் மனைவி கேண்டிஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறுகையில், 'நாங்கள் இந்த வருடத்தில் ஒவ்வொருவருடைய ஆதரவையும், அன்பையும் பெற்றோம்.

எங்கள் குடும்பத்தில் தற்போது நான்கு பேர் உள்ளோம். 2019இல் மேலும் ஒருவர் வர இருக்கிறார். இதை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறோம். அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்' என தெரிவித்துள்ளார். (ஐ)



# மெல்பேர்ன் ஸ்டார்ஸ் வெற்றி

பிக் பஷ் ரி-20 தொடரின் 16ஆவது லீக் போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

மெல்பேர்ன் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணியும், மெல்பேர்ன்ரெனேகேட்ஸ்அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய மெல்பேர்ன் ரெனேகேட்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள்நிறைவில்9விக்கெட்டுகள்இழப்புக்கு 148 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக டேனியல் கிறிஸ்டீயன் 32 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் டுவைன் பிராவோ 3 விக்கெட்டுகளையும், மார்க்கஸ் ஸ்டொயினிஸ் மற்றும் ஸ்கெட் பொலன்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து, 149 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, 17.5 ஓவர்கள் நிறைவில்3விக்கெட்டுகள்இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக மார்க்கஸ் ஸ்டொயினிஸ் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் கமரூன் போய்ஸ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி சார்பில், பந்து வீச்சில்2விக்கெட்டுகளையும்,துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காது 78ஓட்டங்களையும் பெற்றுக் கொண்ட மார்க்கஸ் ஸ்டொயினிஸ் தெரிவு செய்யப்பட்டார்.

(ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



## ஒருமித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு கொண்டு வரப்படுகின்றபோது அது நியாயமானதொன்றாக இருக்கும் பட்சத்தில் அதற்கு எமது மக்கள் தமது ஆதரவைக் கொடுப்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் இலங்கை நட்புக் குழுவின் உறுப்பினருமான ஜெபிரி வான் ஓர்டன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் சந்தித்தார்.

இதன்போது நாட்டில் நிலவும் அரசியல் நிலைமை தொடர்பில் ஜெபிரி வான் ஓர்டனைத் தான் தெளிவுபடுத்தியபோதே மேற்கண்டவாறு கூறியதாக இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தச் சந்திப்பில் அரசமைப்புச் சபையின் மீள் நியமனத்தின் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டினேன். அதேவேளை, இந்த அரசமைப்புச் சபையின் மீள் நியமனத்தால் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை பேணப்பட்டுள்ளமையானது கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் மூலம் நிரூபணமாகியுள்ளமையையும் எடுத்துரைத்தேன்.

அரசை மீளக் கொண்டுவருவதற்கு நாம் வழங்கிய ஆதரவு கொள்கை அடிப்படையிலானதாகும் என்றும் குறிப்பிட்டேன்.

நாடானது ஒரு பிரதமரோ, அரசோ இல்லாத ஒரு இக்கட்டான நிலைமையில் இருந்தபோது நாட்டின் பொருளாதாரத்துக்கும் நிறுவனங்களின் சுமுகமான செயற்பாடுகளுக்கும் ஏற்பட இருந்த பாதக விளைவுகளைத் தடுக்கும் முகமாகவே அரசை மீளக் கொண்டு வருவதற்கான ஆதரவைக் கொடுத்தோம் என்று கூறினேன்.

13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டதிலிருந்து பதவிக்கு வந்த ஒவ்வொரு தலைவர்களும் அரசமைப்பில் முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்குப் பல்வேறு கருமங்களை மேற்கொண்டுள்ளனர். ஜனாதிபதி பிரேமதாஸவின் காலத்தில் மங்கள முனசிங்க அறிக்கை, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் 2000ஆம் ஆண்டு அறிக்கை மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அனைத்துக் கட்சி தெரிவுக்குழு மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் அறிக்கை போன்றன அரசமைப்புக்கு அதிகளவு முன்னேற்றங்களைப் பரிந்துரைத்திருந்தன எனவும் தெரிவித்தேன்.

கடந்த முப்பது வருடங்களாகப் பல்வேறு கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தற்போது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதனை நாட்டின் நன்மை கருதி நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இதில் நான் நியாயமாக நம்பிக்கை கொண்டுள்ளேன். ஏனெனில் இது எனது நாடு. இந்த நாடு செழிப்படைய வேண்டும் என்பது எனது விருப்பம். எனவே, என்னால் நம்பிக்கையற்றவனாக இருக்க முடியாது எனவும் தெரிவித்தேன்.

காணி விடயம் தொடர்பில் இந்தச் சந்திப்பில் பேசினோம். அரசால் பிரதேசங்களின் இன விகிதாசாரத்தில் மாற்றங்களைக் கொண்டுவரும் நோக்கில் முன்னெடுக்கப்படும் குடியமர்வுகளை எதிர்க்கின்றோம். மாறாக இயற்கையாக மக்கள் குடியமர்வதை எதிர்க்கவில்லை எனவும் குறிப்பிட்டேன்.

தமிழ் பேசும் மக்கள் தமது நிலத்தையும் கலாச்சாரத்தையும் பேணுவதில் மிகவும் உள்ளார்ந்த அக்கறை கொண்டவர்கள் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

இந்த சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜெபிரி வான் ஓர்டன், 2009ஆம் ஆண்டுக்குப்பின்னர் இலங்கையில் நல்லிணக்க முயற்சிகளுக்கு அதிகளவு வெளிநாட்டு உதவி கிடைக்கும் எனத் தான் எதிர்பார்த்ததாகவும், அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு போதிய முயற்சிகளை மேற்கொள்ளாமையால் அந்த எதிர்பார்ப்பு தகர்ந்தது எனவும், இது தொடர்பில் தான் கவலையடைந்தார் எனவும் தெரிவித்தார் – என்றார். (ஐ)

## ஆயுதங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

கனகராயன்குளம் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு, புதூர் வீதியில் ஆயுதங்களுடன் ஒருவர் நடமாடுகிறார் என இரகசியத் தகவல் கிடைத்தது. அதனை அடுத்து அந்த நபரைக் கைது செய்யப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

பொலிஸாரைக் கண்டதும் அந்த நபர் ஆயுதங்களைக் கைவிட்டு காட்டுக்குள் ஓடி தலைமறைவாகியுள்ளார். 4 கைக்குண்டுகள், ஒரு கைத்துப்பாக்கி, கைத்துப்பாக்கி மகசின், ரவைகள், லைட்டர், சோப், பற்பசை, கைபேசியின் சார்ஜர் உள்ளிட்டவற்றைப் பொலிஸார் மீட்டனர்.

இந்த நிலையில் காட்டுக்குள் தலைமறைவான நபரைக் கைது செய்யும் நோக்குடன் நேற்று அதிகாலை முதல் இராணுவத்தினர், பொலிஸார், பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினர், புலனாய்வாளர்கள் புதூர்ப் பகுதி காட்டைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை.

இதன்போது விசேட அதிரடிப் படையினர் மற்றும் மோப்ப நாய்களின் உதவியும் பெறப்பட்டுச் சோதனைகள் பிற்பகல் 2 மணி வரை இடம்பெற்றன. (ஐ)

## மோ.சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற வாகன விபத்தில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ஆறுகால் மடம் புது வீதியைச் சேர்ந்த திரவியம் வியஜராச (வயது–65) என்பவரே உயிரிழந்தார்.

முதியவர் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடப் பகுதியில் சிறு வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வந்துள்ளார். நேற்றுப் புதன்கிழமை காலையும் வழமை போன்று வீட்டில் இருந்து தனது வியாபார நிலையத்தைத் திறப்பதற்காக அவர் நடந்து சென்றுள்ளார்.

வியாபார நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அவர் வீதியை கடக்க முற்பட்டபோது, யாழ்ப்பாணத்தில் இருந்து மானிப்பாய் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார்சைக்கிளுடன் மோதி விபத்து ஏற்பட்டது.

இதனால் வீதியில் இருந்து தூக்கி எறியப்பட்ட முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சம்பவ இடத்துக்கு வந்த யாழ். பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

மோட்டார்சைக்கிளில் பயணித்தவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் நேற்று மாலை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

அவர் நீதிமன்ற உத்தியோகத்தர் எனப் பொலிஸாரால் மன்றில் தெரிவிக்கப்பட்டது. வழக்கை ஆராய்ந்த நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல், சந்தேகநபரை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ-07)

## பரபரப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளதால் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு செயற்குழு உறுப்பினர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் உயர் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல், புதிய தொகுதி அமைப்பாளர்கள் நியமனம் உட்பட மேலும் சில விடயங்கள் குறித்து இதன்போது இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

அத்துடன், கட்சி தலைமைத்துவத்துக்கு எதிராகச் செயற்படுபவர்கள் மீது கடுமையான தீர்மானம் எடுக்கப்படவேண்டும் என்ற யோசனையும் நிறைவேற்றப்படவுள்ளது.

அதேவேளை, சுதந்திரக் கட்சியைக் கைப்பற்றுவதற்கு சந்திரிகா தலைமையில் குழுவொன்று முயற்சித்து வருவதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அது சம்பந்தமாகவும் இன்றைய கூட்டத்தில் கவனம் செலுத்தப்படலாம் எனத் தெரிய வருகிறது. (ஐ)

## யார் இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் தெரிவித்தனர்.

இராணுவம் மற்றும் விமானப் படையில் இணைவதற்காக நாமல் குமார, போலி ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் சி.ஐ.டியினர் தெரியப்படுத்தினர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷ குடும்பத்தைக் கொலை செய்வதற்கு சூழ்ச்சி வகுக்கப்பட்டது என்றும்,

இதன்பின்னணியில் பயங்கரவாதவிசாரணைப்பிரிவுக்கு பொறுப்பான முன்னாள் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா தொடர்புபட்டுள்ளார் என்றும் நாமல் குமார திடுக்கிடும் தகவல்களை அம்பலப்படுத்தினார்.

இதையடுத்து இவ்விவகாரம் தெற்கு அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஏன்! ஆட்சி மாற்றத்துக்கு வழிவகுத்த பிரதான காரணிகளுள் இதுவும் ஒன்றாக மாறியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நியாயமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவார்கள்.

– இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் இலங்கை நட்புக் குழுவின் உறுப்பினருமான ஜெபிரி வான் ஓர்டன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இந்தச் சந்திப்பில் சுமந்திரன் எம்.பியும் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தப் பேச்சில் புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தெளிவுபடுத்திய சுமந்திரன் எம்.பி., கடந்த டிசெம்பர் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப்பட்ட வரைவு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன்பதாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கடும்போக்குடைய புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் நாம் எடுக்கும் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தாது என்று இந்தச் சந்திப்பின்போது இரா சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் அத்தகைய கடும்போக்காளர்களை மக்கள் தோற்கடித்திருக்கின்றார்கள் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். (ஐ)

## 2019ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் ஒக்ரோபர் 26ஆம் திகதி அப்போதைய கூட்டு அரசைக் கலைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்து இடைக்கால அரசை அமைத்தார்.

எனினும் இடைக்கால அரசுக்குப் பெரும்பான்மைப் பலம் கிடைக்கததால் பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலகினார். மீளவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சி பீடமேறியது.

இந்த நிலையில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசில் மீளமைக்கப்பட்டதால் முன்னர் தயாரிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்ட வரைவு மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதனால் இந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30ஆம் திகதிவரையான அரச செலவீனங்களுக்கு இடைக்காலக் கணக்கறிக்கை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீர, மறுசீரமைக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை வரும் மார்ச் 5ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்.

2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட வரைவை மறுசீரமைக்கும் பணிகளில் நிதி அமைச்சர் மற்றும் திறைசேரிச் செயலாளர் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## கோட்டாபயவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலில் போட்டியிடப் போவதில்லை. அத்துடன் அவர் தனது அமெரிக்கப் பிரஜாவுரிமையை ரத்துச் செய்யக் கோரி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு விண்ணப்பிக்கவும் இல்லை என்று ராஜபக்ஷ குடும்ப வட்டாரங்கள் இணையத்தளச் செய்திச் சேவையொன்றுக்கு உறுதிப்படுத்தியுள்ளன.

வெளிநாடொன்றின் பிரஜையாக இருக்கும் இலங்கையர் தேர்தலில் போட்டியிடுவதை அரசமைப்புக்கான 19 வது திருத்தம் தடுக்கிறது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வசதியாக கோட்டாபய தனது அமெரிக்கப் பிரஜாவுரிமையை கைவிடுவார் என்று ராஜபக்ஷ முகாமின் ஆதரவாளர்கள் நீண்ட நாட்களாக நம்பிக்கை வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

எனினும், எனக்குத் தெரிந்த வரையில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான திட்டம் அவரிடம் இல்லை என்று ஒரு வட்டாரம் கூறியது.

ராஜபக்ஷ குடும்பத்தின் எதிர்கால அரசியல் வாகனமான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்வதை முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் இதுவரையில் தவிர்த்தே வந்திருக்கிறார். ஆனால், வியத்மகா, எலிய மகாநாடுகளை அவர் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பாடு செய்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடனான சந்திப்பொன்றின்போது அடுத்த ஜனாதிபதி தேர்தலில் கூட்டு எதிரணி / பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக போட்டியிடுவீர்களா என்று கோதபாயவிடம் கேட்கப்பட்டபோது, 'நிலைவரங்கள் போகின்ற போக்கைப்பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது – என்றார். (ஐ)

## சாவிக்கொத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டத்திலான அதிகாரிகளை சந்திப்பதற்காகவுமே கொழும்பு, டார்லி வீதியில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்துக்கு ஜனாதிபதி சென்றார் எனக் கூறப்படுகின்றது.

உட்கட்சிபூசலால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியானது மூன்று அணிகளாகப் பிளவுபட்டுள்ளது. இந்நிலையில் கட்சி தலைமையகத்தைக் கைப்பற்றுவதற்கு சந்திரிகா அம்மையார் தலைமையிலான குழுவொன்று முயற்சிப்பதாக கூறப்பட்டது.

இதனால், சு.கவின் தலைவரான ஜனாதிபதி நாட்டில் இல்லாதவேளை, கட்சி தலைமையகம் இழுத்து மூடப்பட்டிருந்தது. சாவிக்கொத்து மருதானை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஜனாதிபதி நேற்று தலைமையகம் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டுக்கான புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது புத்தாண்டு வாழ்த்துக்களை முதலில் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, குறுகிய உரையொன்றை நிகழ்த்தினார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சுகளுக்கான நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஒதுக்கப்பட்டுள்ள விதம் தொடர்பில் சில அமைச்சர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். இது விடயத்தில் எவ்வித உள்நோக்கமும் கிடையாது.

எந்தெந்த அமைச்சின் கீழ் எந்தெந்த அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் வரவேண்டும் என்ற பட்டியலைப் பிரதமர்தான் எனக்கு அனுப்பியிருக்கவேண்டும்.

அந்தப் பட்டியல் கிடைக்காத காரணத்தினாலேயே, புத்தாண்டில் அமைச்சுகள் இயங்கவேண்டும், மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்பதால் ஜனாதிபதி செயலக அதிகாரிகளின் உதவியுடன் விடயதானங்கள் ஒதுக்கப்பட்டன – என்றார்.

இதற்குப் பதிலளித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

வருட இறுதியில் உங்களுக்கு நிறைய வேலைகள் இருந்திருக்கும். அதைக் கருதித்தான் நான் அனுப்பவில்லை என்று கூறியதுடன், புதிய பட்டியலையும் ஒப்படைத்தார்.

இதன்பிரகாரம் அதிருப்தியில் இருக்கும் அமைச்சர்களுக்கு விரைவில் நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன், புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒரு போதும் இடமளிக்காது.

புதிய அரசமைப்பு தேவையா அல்லது அரசமைப்பில் திருத்தம் செய்ய வேண்டுமா என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

அரசமைப்பு மாற்றத்துக்கு, மக்களின் ஆணையை அரசு பெற வேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

# ரணில், சுமந்திரன், மஹிந்த விரும்பியபடி புதிய அரசமைப்பை உருவாக்க முடியாது



## பெப். 4ஆம் திகதிக்கு முன் அரசமைப்பு வரைவு வரும் என்பதும் பொய் என்கிறார் அனுரகுமார

கொழும்பு, ஜன. 03

"பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் புதிய அரசமைப்பு வரைவு கொண்டுவரப்படும் எனச் சிலர் கூறுகிறார்கள். ஆனால், இது முற்றிலும் பொய்யான ஒரு கருத்து. தற்போது அரசமைப்பில் திருத்தத்தை மேற்கொள்வது தொடர்பிலேயே நாடாளுமன்றில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன. புதிய அரசமைப்பை ரணில் விக்கிரமசிங்க, சுமந்திரன், மஹிந்த ஆகியோருக்கு ஏற்றாற்போல உருவாக்கமுடியாது."

– இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க.

புதிய அரசமைப்பு தொடர்பில் மக்களுக்குப் பொய்யான கருத்துக்களைக் கூறி, மீண்டும் இனவாதத்தைப் பரப்பச் சிலர் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த ஆண்டு தேர்தல்களுக்கான ஆண்டாக இருக்கிறது. மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

அதேபோல், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்யும் கடப்பாடும் எமக்கு உள்ளது.

இந்த அரசுக்கு நீண்ட காலம் பயணிப்பதற்கான பெரும்பான்மை நாடாளுமன்றத்தில் இல்லாத நிலையில், பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டிய நிலைமையிலும் நாம் காணப்படுகிறோம்.

தேர்தல்களின்போது இனவாதம் பரப்பப்படுவது நாட்டின் தொடர்ச்சியாக இடம்பெறும் ஒன்றாக இருக்கிறது. தெற்கில் மஹிந்த தரப்பினரால் இனவாதப் பரப்புரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை ஜே.வி.பி. ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. போருக்குப் பின்னர் எமது நாட்டின் அரசியலில்பாரியமாற்றங்கள்இடம்பெற்றுள்ளன.

அனைத்து மக்களுக்கும் உரித்தான அரசமைப்பை நாம் கொண்டுவர வேண்டும். இதனாலேயே 78ஆம் ஆண்டு அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பை கொண்டுவரவேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம்.

சிலர், பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் புதிய அரசமைப்பொன்று கொண்டுவரப்படும் எனக் கூறுகிறார்கள். ஆனால், இது முற்றிலும் பொய்யான ஒரு கருத்தாகும். தற்போது அரசமைப்பில் திருத்தத்தை மேற்கொள்வது தொடர்பிலேயே நாடாளுமன்றில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

புதிய அரசமைப்பை ரணில் விக்கிரமசிங்க, சுமந்திரன், மஹிந்த ஆகியோருக்கு ஏற்றாற்போல உருவாக்கமுடியாது. அதற்குப் பல கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன – என்றார். (ஐ)

## துப்பாக்கிக் கலாசாரத்தை உடன் அடக்க வேண்டும்!

### நாமல் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, ஜன. 03

நாட்டில் அதிகரித்துவரும் துப்பாக்கிக் கலாசாரத்தை அடக்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதியின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அனைத்தும் முறையான உளவுப் பணிகள் முன்னெடுக்கப்படுவதன் மூலம் பெருகி வருகின்றன. இதற்கு குடவெல்ல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஓர் உதாரணமாகும்.

இதனைக் கட்டுப்படுத்த அத்தியாவசிய நுண்ணறிவு நடவடிக்கைகள் மற்றும் வலுவான சட்டங்கள் அவசியமாகும் – என்றார். (ஐ)

## பஸ் தரிப்பிடத்துக்குள் வெடிமருந்துகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 03



யாழ். சிறுவர் நீதிமன்றத்துக்கு அருகாமையில் சி-4 வெடிமருந்து 1 கிலோ மற்றும் டெட்டனேட்டர் 4 ஆகியவைவிசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்துக்கு அருகாமையிலுள்ள பஸ் தரிப்பிடத்திலிருந்து வெடிமருந்துகளைப் படையினர் மீட்டனர்.

ஒரு கிலோ நிறையுடைய சி4 வெடிமருந்து 7 பொதிகள் மற்றும் டெட்டனேட்டர் என அழைக்கப்படும் வெடி மருந்திற்குப் பயன்படுத்தப்படும் 4 குழாய்களும் மீட்கப் பட்டுள்ளன.

இந்தப் பகுதியிலுள்ள மீனவர்கள் மீன்பிடிக்க எடுத் துச் செல்வதற்காக பஸ் தரிப்பிடத்தில் அவற்றை வைத்திருக்கலாமென விசேட அதிரடிப் படையினர் கூறினர்.

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக 150 ஸ்டோல்கள் ஒரே நேரத்தில்
வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்
4 நாட்களுக்கு மட்டும்
2019 [dtup 3k;> 4k;> 5k;> 6k; jpfjpfspy;
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
நேரம் : மு.ப 10.00 – பி.ப 8.00 வரை (பகலுணவு நேர இடைவெளி இல்லை)
இறக்குமதி செய்யப்பட்ட எக்ஸ்குலுசிவ் டிசைனர்
ஜுவலரி விற்பனை திருவிழா - 2019
கோல்ட் கவரிங், ஹைதராபாத் பேர்ல்ஸ், ஜெய்பூர் குண்டன், கிறிஸ்டல், அமெரிக்கன் டயமன்ட், கொரியன் ஸ்டோன் ஜுவலரிகளை இலங்கை பெண்களும் வாங்கலாம்.
ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே
உண்மையான ஏற்றுமதி பெறுமதி 1500/- முதல் 3000/- ஐ கொண்ட ஜுவலரிகளை
நாம் உங்களுக்கு தருவது
ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே
இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாத படியால் சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| ❖ கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ்....... | ரூ. 200/- மட்டுமே | ❖ கோல்ட் கவரிங் செயின்........................ | ரூ. 400/- மட்டுமே |
| ❖ கோல்ட் கவரிங் செயின் பென்டட்..... | ரூ. 200/- மட்டுமே | ❖ அவுஸ்திரேலியன் டயமன்ட் நெக்லஸ் செட்................. | ரூ. 400/- மட்டுமே |
| ❖ அவுஸ்திரேலியன் டயமன்ட் பிங்கரிங்... | ரூ. 200/- மட்டுமே | ❖ கோல்ட் பிளேட்ட் வலயல் செட்............................ | ரூ. 400/- மட்டுமே |
| ❖ வெஸ்டன் ஸ்டைல் இயரிங்............ | ரூ. 200/- மட்டுமே | ❖ கோல்ட் பிளேட்ட் செயின்.................................. | ரூ. 400/- மட்டுமே |
| ❖ அமெரிக்கன் டயமன்ட் இயரிங்......... | ரூ. 200/- மட்டுமே | ❖ சில்வர் பிளேட்ட் கொலுசு .................................. | ரூ. 400/- மட்டுமே |
| ❖ கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம்.... | ரூ. 200/- மட்டுமே | ❖ அவுஸ்திரேலியன் டயமன்ட் பிரேஸ்லட்...................... | ரூ. 400/- மட்டுமே |
| ❖ கொரியன் ஸ்டோன் சாரி பின்........... | ரூ. 200/- மட்டுமே | ❖ கோல்ட் கவரிங் பெண்கள் & ஆண்களுக்குரிய பிரேஸ்லட் | ரூ. 400/- மட்டுமே |

விசேட சலுகை : திருமணம் மற்றும் பார்டிகளுக்கான விசேட ஜுவலரிகள்
ரூ. 600/- முதல் ரூ. 8,000/- வரையான விலைகளில் உள்ளன.
இடம் : வீரசிங்கம் மண்டபம், 10/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
அனுமதி இலவசம் மொபைல் : 0765886866 பெண் விற்பனையாளர்கள் தேவை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள கலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.